570

திருவரங்க ... றை

# கார்வண் ... மாலை



AUG 1930

அ. இரங்கசாமி முதல ... சன்ஸ்

சுத்தப்பதிப்பு
சென்னை பூமகள் பிரச ...
இதன் விலை] 1930 ... ணை 4

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்.

# கார்வண்ணமாலை

என்னும்

## திருவரங்கச் சந்நிதிமுறை.

காவேரியின் மத்தியில்

அரங்கமாநகரில்

வைகுண்டவிமானத்தில் திருமகள் நிலமகள் சமேதராயும்,

விபீஷணாழ்வார் கவரிவீசவும்,

நாரதமகாமுனிவர் யாழ்வாசிக்கவும்,

ஆயிரம் பணாமுடியையுடைய சேஷசயனத்தின்கண்

அரிய நித்திரைசெய்கின்ற

கார்வண்ண சொரூபியாகிய ஸ்ரீரங்கநாயகர் திருவருள் பெற்று

அரியக்குடியில் மடங்கட்டி

வசிக்கின்ற

நமசிவாய நாவலர் பாடியது

2814
894.8111

சென்னை:

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பித்தது.

1930.

நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# அவையடக்கம்

கட்டளைக் கலித்துறை.

ஜெயமாகவாழு மெழுவகைத்தோற்றமுஞ் சித்திரத்தில்
நயமாயெழுதத் துணிந்ததைப்போ லரிநாரணன் மேற்
சுயமாயுரைத்த துதித்தமிண்மாலையைத் தொல்லுலகிற்
றயவாய்ப்பரிந்தருண் மேலோர்திருவடித் தாட் டுணையே.

வெண்பா.

கடல்கிழக்குத் தெற்கு கரைபுரளும் வெள்ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையும்-வடதிசையில்
ஏளநாட்டுப் பண்ணை யிருபத்து நாற்காதஞ்
சோளநாட் டெல்லையெனச் சொல்.

இவ்விதமாகச் சொல்லப்பட்ட சோழவள நாட்டுக்குள்ளான புதுக்கோட்டை யென்னுஞ் சமஸ்தானத்தில் சற்றேறக்குறைய 60-வருடத்துக்குள்ளாக பிரதானிக்கஞ் செய்திருந்த தக்ஷிணத்து வேளான்குலதிலகராயும், சிவபூஜை-சிவார்ச்சனை-சிவபக்தி-சிவனடியார் நேசவிசுவாசஞ் சிறந்தவராகியும் விளங்காநின்ற ஸ்ரீமது வைகுந்தம் பிள்ளையினுடைய நல்வினைப்பயனால் மிகுந்த சந்ததியான தானப்பிள்ளையினது மரபிற்றோன்றிய பொன்னம்பலம் பிள்ளையின் நன்னயப்புத்திரராயும், ஸ்ரீரங்கநாதருடைய அனுக்கிரகம் பெற்று 40-வயது சென்று இப்போது அரியக்குடியில் மடங்கட்டி அந்த மடத்தில் வசிக்கின்ற சுத்தப்பிரமச் சைதன்யமுடைய நமச்சிவாய னென்னும் நற்பெயர் பூண்ட நாவலன்பாடிய இத் திருவரங்கச் சந்நிதிமுறையை யாவரும் எளிதில் உணரும்பொருட்டு களத்தூர் தமிழ்ப்புலவர் வேதகிரிமுதலியார் குமாரர் ஆறுமுக முதலியாரால் பிழையறப் பரிசோதித்து நிறைவேறியது.

---

தமிழ்நாடு ... நிலையம்
18375
சென்னை 600 008

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# கார்வண்ணமாலை

## காப்பு.

சீர்மேவிய ராமகதைதனை முப்பது செந்தமிழால்
பார்மேல் விளங்கவிக் கார்வண்ணமாலைப் பநுவல்சொல்ல
தார்மேவுமேருவில் வாங்கிய சக்கரன் சத்தியருள்
கார்மேனி யைங்கர மும்மதத்தோன் பதங்காப்பதுவே.

---

தேவருமேலவர் தீங்கினைக்கூறச் சிவனயன்மால்
மூவருங்கூடி யிராவணனாவி முடிப்பதற்கு
மேவுந்தசரத புத்திரனாக விளங்கவந்த
காவலனேயித மெந்தனைக்காத்தருள் கார்வண்ணனே. 1

முந்தவயோத்தியிற் றம்பியர்மூவர் முறைமுயங்கத்
தந்தையின்சொற்படி கோசிகனுக்குத் தவத்துணையாய்
சிந்தைமகிழ்ந்திடத் தாடகைதன்னைச் சிரமறுத்த
கந்தமலர்ப்பதனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. 2

வலியானகோசிகன் பின்னேநடந்து வரும்வழியில்
கிலியாமகலிகை சாபமுந்தீர்த்துக் கிரியைசெய்து
சலியாமல்வில்லை வளைத்துமிதிலையிற்சானகியைக்
கலியாணஞ்செய்த வபிராமகாத்தருள் கார்வண்ணனே. 3

சௌரியம்பேசிவின் றந்தைமுன்வந்த தநுவலனை
அவஜயமாக்கிப் பரதனைக்கேகய நாடனுப்பி
நவமணிமாட நகர்புகுந்தேமுடி நாட்டுதற்காங்
கௌசலபுத்திரனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. 4

வைகையுமெய்திடு நூண்டையினாலு மனவெறுப்பாஞ்
செய்கைகள்கூனி கலைத்திடப்பார்த்திபன் தேம்பவரம்
உய்கையிலாள்மகன் பாராளக்காட்டிலுனைவிடுத்த
கைகைதனைப்பணிந்தே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. 5

மங்கைமனத்தணங் கைகேசியீந்த மரவுரியுஞ்
செங்கையிலேந்திய வில்லுடன்றம்பியுந் தேவியுமாய்
பங்கயம்போன்முகங் கொண்டுசென்றேகுகன் பண்புகுந்து
கங்கைகடந்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. 6

நாட்டியகோசலை நாட்டைப்பரதற்கு நன்மகுடஞ்
சூட்டித்திருவடிப் பாதுகையீந்து சுகமுடனே
தாட்டிகமாகிய தம்பியுந்தானுஞ் சானகியுடன
காட்டினடந்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. 7

பழுதுசெய்துவந்தே பாவிவிராதன் பணிந்துனடி
தொழுதிடும்போதவன் றுன்பத்தைநீக்கித் துயரினுழன்
றழுதபயோமெனு மந்தணர்க்காசி யளித்தளிசேர்
கழுகிடஞ்சென்றவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. 8

மஞ்சனென்றன்புரை செய்துசடாயு வனந்தனின்மா
சஞ்சலந்தீர்வுற மூவரும்பன்னக சாலையுற்று
மஞ்சவடியி லரக்கர்வரும்வினைப் பார்த்திருந்த
கஞ்சமலர்ப்பதனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. 9

நாரியென்றேவந்த சூர்ப்பநகையெனும் ராட்சசியைக்
கூரியவாள்கொண்டு மூக்கையுங்காதையுங் கொய்திளையோன்
வீரியமாக வுனைத்தொழுதேத்த விழைந்திஃதே
காரியமென்றவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. 10

துரந்தரனாகிய ராவணன்றம்பியுந் தூடணனுஞ்
சரந்தொடுதேர்ப்பரி யானைபதாதி தைத்தியரும்
நிரந்தரமாக முகூர்த்தத்தின்மாள நெடுஞ்சிலையாள்
கரன்றனைவென்றவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. 11

நிலைபோமிராவணன் றங்கையின்பேச்சை நிசமென்றெண்ணி
மலையாமாரீசனை மானுருவாக்கி வனத்தனுப்ப
சிலைபோல்விழிநுதற் சீதையின்சொற்படி சென்றுவில்லாற்
கலைமானையெய்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. 12

துலங்கியகாட்டி லிலக்குமணன்செலத் துட்டகுணத்
திலங்கியராவணன் சீதையைத்தேர் கொண்டெடுத்திடுமா
விலங்கினம்பட்சிகள் விண்ணொடுபூமியு மெய்யுருகக்
கலங்கிமலைத்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. 13

சிவந்திருக்கண்களுந் தீயெழத்தாக்கிச் சிறகிறப்பார்
கவிந்துறுதிரச் சடாயுவைக்கண்டு கலுழ்ந்துருகி
தவந்தருதீக்கடன் செய்துமுடித்துநற் றம்பியுடன்
கவந்தனைவென்றவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. 14

சவரியைக்கண்டு நருங்கனியுண்டு தயவுடன்பா
துவரியிற்பாய வுருவாங்கனிட்ட னுடன்பம்பையிற்

சிவனுருவான வனுமானைக்கண்டு தெளிந்துமனக்
கவலையுரைத்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. 15

திண்புயமேரு சுக்ரீவன்வணங்கச் செயமெனவே
நண்புகொண்டேழு மராமரமெய்து நசிந்தவென்பை
விண்புகக்கால்கொண் டெறிந்துமுன்சீதை வெறுத்தபணி
கண்புகக்கண்டவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. 16

வாணான்மிகுத்திடு தாரகையோடணி மாநகருங்
கோணாமற்கைவச மாக்கியுந்தம்பியைத் தூஷணித்த
வீணாங்கொடுமை விறன்வாலியைக்கொல்ல வில்லிலம்பைக்
காணாமலெய்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. 17

பார்மீதுவாலியைக் கொன்றுசுக்ரீவன் பதிக்கரசாய்
சீர்மேவுகிட்கிந்தை ராச்சியபாலனஞ் செய்யெனத்தேன்
தார்மேவுகாட்டின் மதங்கமலையினிற் றம்பியுடன்
கார்காலங்கண்டிருந் தோயெனைக்காத்தருள் கார்வண்ணனே. 18

துணையானபக்குவச் சுக்ரீவன்வாழ்த்தித் தொழுதிடப்பே
ரணையானவானரச் சேனைகணாற்றிசை யாய்கவென்ன
இணையானதென்றிசைக் கேகனுமான்ற னிருகரத்திற்
கணையாழியீந்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. 19

வண்டுகுயிற்கிள்ளை பாடுமசோக வனந்தனிற்றார்
விண்டுவின்மோதிரஞ் சென்றீந்துசீதை விளம்புமொழி
கொண்டுவந்தேனெனச் சூடாமணியைக் கொடுத்திடக்கண்
கண்டுமகிழ்ந்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. 20

தருணமிதென்று சரண்புக்கிவீடணன் றாழ்ந்தெழில்சேர்
மருமலர்சாத்தியுன் பாதாரவிந்தம் வணங்கியநாள்
பருதிமதிநதி பாருள்ளமட்டும் பதிக்கரசாய்க்
கருணைபுரிந்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. 21

இடமானதற்ப சயனத்தினீயுமொ ரேழுதினம்
திடமானசெய்தி சமுத்திரராசன் றெரிந்துதொழ
அடைவானவானரச் சேனையைக்கூட்டி யகலநெடுங்
கடல்வாயடைத்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. 22

துவசங்கொள்சேனை யிலங்கையிற்சண்டை தொடுத்திடக்கால்
கவரியசைத்திடக் கட்டியங்கூறக் கனகமலைக்
குவரியதான மணித்தேரிலுற்றிடு மிராவணனைக்
கவசமறுத்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. 23

சொர்ணமுற்றோங்கிய தேரொடுரோட்டதர் தூளிசெய்து
வர்ணமதாமுதி ரப்பெருக்கோடிட வானவர்கள்
நிர்ணயமாயுனக் காசிவிளம்ப நிட்டூர்கும்ப
கர்ணனைக்கொன்றவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. 24

சினந்தவருக்கணை யிந்திரசித்தன் செலுத்துமுனை
முனைந்தவராவி யழியாமற்காக்க முறையுடன்சீர்
நினைந்துகருடனும் வந்துவணங்கியே நேரின்மனங்
கனிந்துரைசெய்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. 25

விண்டலம்பூமியும் வேதனும்வேந்தனும் விண்ணவருஞ்
சண்டனுங்கண்டு மனந்தளர்காலையிற் சஞ்சீவியைக்
கொண்டனுமான்வந் துயிர்தரக்கோகுலக் கூத்தினைக்கண்
கண்டருள்விண்டவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. 26

பொய்மாய்கையாம் புரிந்திடுமிந்திர சித்தனுரம்
மெய்சோர்ந்துயிர்கெடச் செந்தழல்வாளி விடுத்தனிகங்
கொய்வாயெனத்தம்பி மேலன்புகொண்டெழிற் கோலமர்க்
கைவாளியீந்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. 27

மிண்டனிராவணன் கூட்டியமூல பலத்தைவிண்மேல்
அண்டருங்கண்டு மழிந்துய்யவோ மோகனக்கணையாற்
றுண்டமதாகத் துகள்போக்கிராவண தூர்த்தனையுங்
கண்டமறுத்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. 28

இனிதானசீதை சிறைநீக்கியண்ட ரிடர்போக்கிமேற்
றனியாமிலங்கை விபீஷணற்காக்கித் தனுக்கோடிசென்
றுனிதாமுனிவனங் கண்டுஜயம்சொல்லி யும்பர்மகிழ்
கனியமுதுண்டவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. 29

இராச்சியங்காக்கின்ற ராசாதிராசர்க்கும் நான்முகற்கும்
பூச்செரியவானவர் மாதவர்தம்பியர் பொன்மனைக்கும்
தாட்சியில்லாமல் வதிஷ்டர்கையான்முடி தாங்கிச்சுகக்
காட்சிகொடுத்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. 30

கார்வண்ணமாலை-முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# அரங்கப்பத்து

இருவினைப்பயனுலிந்த யிகத்தினிலிறந்திடாமல்
மருமலரெடுத்துவந்துன் மலரடிபூசைசெய்தேன்
கருமுதற்போக்கிநின்பொற் கழலிணையளித்தாட்கொள்ளும்
அருமறைப்பொருளதான வரங்கமாநகருளானே. 1

மாயையும்பிறவிநோயும் வல்வினையானதீங்கும்
நாயெனைத்தொடர்ந்திடாமல் நானுனக்கடிமையானேன்
சேயெனக்கிப்போதுந்தன் றிருவருளளித்தாட்கொள்ளும்
ஆயனேயமரர்போற்று மரங்கமாநகருளானே. 2

மாதர்தம்வலையிற்சிக்கி மயங்கியேபிறவிநோயால்
பூதலத்தலைந்திடாமற் பொற்பாதம்போற்றிசெய்தே
சீதரமுகுந்தாவுந்தன் றிருவருளளித்தாட்கொள்ளும்
ஆயனேயமரர்போற்று மரங்கமாநகருளானே. 3

மடமயிலென்னுமின்னார் வழிவரும்பிறவிநோயால்
சடமுருவெடுத்திடாமற் றமியனுனுந்தன்பாதம்
திடமதாய்ப்போற்றிசெய்தேன் றிருவருளளித்தாட்கொள்ளும்
அடமகன்றமரர்போற்று மரங்கமாநகருளானே. 4

மண்டலந்தன்னிற்பந்நாள் வளர்ந்திடும்பிறவிநோயாற்
சண்டன்வந்தெனைத்தொடாமற் றமியனுன்னம்பொற்றாளை
தெண்டனிட்டுருகிநைந்தேன் றிருவருளளித்தாட்கொள்ளும்
அண்டர்கள்பணியுங்கோவே யரங்கமாநகருளானே. 5

வஞ்சனையானசூது மாயையும்பிறவிநோயும்
எஞ்சியவெனைத்தொடாம லிணைமலர்ப்பதம்பணிந்தேன்
செஞ்சிலைவளைத்தராமா திருவருளளித்தாட்கொள்ளும்
அஞ்சினேனென்னைக்காப்பா யரங்கமாநகருளானே. 6

இத்தலந்தன்னிற்சன்ம மெடுத்தெடுத்தலித்தோயாமல்
நித்தமுமுந்தன்பாத நினைவினுற்போற்றிசெய்தேன்
சித்தமதிரங்கியுந்தன் றிருவருளளித்தாட்கொள்ளும்
அத்தனேயென்னைக்காப்பா யரங்கமாநகருளானே. 7

கயலிணைவிழியார்தங்கள் கவடெனும்வலையிற்சிக்கி
நயனநீர்சொரிந்துமல்க நானுனக்கடிமையானேன்
ஜெயமதாயெனக்கிப்போதுன் றிருவருளளித்தாட்கொள்ளும்
அயன்முதலமரர்போற்று மரங்கமாநகருளானே. 8

பொய்யெனுஞ்சடலந்தன்னைப் போற்றியேபுகழ்ந்துநித்தந்
தையலார்வலையாற்சிக்கி தயங்கிநான் மயங்கிடாமல்
செய்யனேயெனக்கிப்போதுன் றிருவருளளித்தாட்கொள்ளும்
ஐயனேயமரர்போற்று மரங்கமாநகருளானே. 9

ஊருநீபேருநீயெம் முறவுநீயறிவுநீயிப்
பாருநீயுயிர்கட்கெல்லாம் படியளப்பவனுநீயே
தேருநரருளாலுந்தன் றிருவருளளித்தாட்கொள்ளும்
ஆருமற்றேற்குநீயே யரங்கமாநகருளானே. 10

என்னையுமுருவாய்ச்செய்து யிருகையுநொந்தான்வேதன்
பின்னையுமேமனுவி பிடித்தெனைச்சலித்தான்பூமி
தன்னிலேகுருவாமூர்த்தி தானுரைத்திளைத்தானித்தம்
அன்னையுஞ்சுமந்தலுத்தா ளரங்கமாநகருளானே. 11

அரங்கப்பத்து - முற்றிற்று.

---

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# இ ர ங் க ப் ப த் து

பொருளேசுவையேநவரசமே புலனேபொறியேபுலனறியா
மருளேதெளிவேவனமலையே வளர்வேகுறைவேமயங்குகின்ற
இருளேயொளியேகதிர்மதியே யிகமேபரமேயெனிலுறையும்
அருளேயமுதேகதிர்பெறவே யரங்காவடியேற்கிரங்காயே. 1

இணையேதளர்வேவணங்குனர்க்கு மிசைவேநிசமேயெனக்குவருந்
துணையேயறிவேமறைமொழியுஞ் சொல்லேபொருளேசுகமுடையார்
குணமேமனமேயருளுடைய குன்றேயமுதேயநந்தனெனும்
அணைமேற்றுயிலும்மணிவிளக்கே யரங்காவடியேற்கிரங்காயே. 2

உரமேபகையேயுடனுயிரே யூனேயுறவேயுறுதியுள்ளத்
திரமேதுதிப்போர்தமக்கிரங்குந் தேவேபிறவிப்பயமறுக்கும்
பரமேகதியேயெனக்கிரங்கும் பண்பேயிமையோர்பணியும்வினைக்
கரமேயமுதேகதிபெறவே யரங்காவடியேற்கிரங்காயே. 3

வழுவேன்றமியேன்மனத்துறுதி மயவேனிறைவாந்திருநாமம்
தொழுவேன்வழுவாதிருகரத்தான் றுதிப்பேனேவாற்றுணையடிக்கீழ்
விழுவேனுபயபதத்தெளியேன்விழிமேற்கண்ணீர்சொரிந்திடச்சோர்ந்
தழுவேனழுவாக்கதிபெறவே யரங்காவடியேற்கிரங்காயே. 4

மெய்யாவினைகளொருகோடி சிறியேன்செய்துமிருத்ததனல்
செய்யாகியதேவனது பத மேவாதிருந்தேன்வீணாளாய்
பொய்யாகியபேருடலதனைப் புகழ்ந்தேனழியாப்பொருளெனவே
ஐயா துய்யாகதிபெறவே யரங்காவடியேற்கிரங்காயே. 5

விரிவாகியபேருலகமதின் மேதாவியர்சொற்சாத்திரத்தை
பரிவாய்படித்தேன்பயனுணர்ந்துபதமேற்பணிந்தேன்பலன்பெறவே
குருவாய்நீவந்தெனது குறைகுறையைத் தீர்த்தாள்குணமுடையாய்
அருவாய்வருவாய்கதிபெறவே யரங்காவடியேற்கிரங்காயே. 6

துன்பப்பிறவிக்கடலினைத் தொலைத்தேனீந்திக்கரையேறி
இன்பப்பெருக்கானந்தவெள்ள மெளியேனருந்தற்கிரவுபகல்
தென்புற்றூன்றன்றிருநாமத்தின் துதித்தேன்சிற்றறிவால்
அன்பிற்கழுதேகதிபெறவே யரங்காவடியேற்கிரங்காயே. 7

குறியேன்கொடியார்மடியுறவைக் கொள்ளேன்விள்ளேனொருநாளும்
பிறியேன்பெரியோர்தனைக்கண்டால் பிணக்கேன்வணங்கியிணங்கிடுவேன்
தரியேன்தமியேனுனதருளைத் தாராதொழிர்தாற்றரணிமிசை
அரியேவறியேன்கதிபெறவே யரங்காவடியேற்கிரங்காயே. 8

பழகேன்சிறியாரிணக்கமதைப் பாவந்தருளுமின்னார்தளைக்கண்
டிழகேனென்றனிருதயத்தி லெளியேனின்னைப்பிடித்தபிடி
நழுகேன்வழுகேன்கிருபைசெய்வாய் நாராயணனேவனமாலை
அழகேபுகழுங்கதிபெறவே யரங்காவடியேற்கிரங்காயே. 9

என்னாசையினாலிரவுபக லிதுவேதொழிலாயிளமுலையார்
தன்னால்மயங்கியறிவழிந்தேன் தாமோதரனேகிருபைசெய்வாய்
உன்னாலடியேனுயிருய்ய வுரைத்தேன்தமிழைபெருபஃதாய்
அன்னாய்முன்யானையைக்காத்த வரங்காவடியேற்கிரங்காயே. 10

இரங்கப்பத்து முற்றிற்று.

---

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# மெய்ஞ்ஞானஜோதிமயம்

காணாதுகாணவே மோகினியினுருவமாய்க்
காசினியில்வருக விலையோ
கானகந்தனிலுனது பாததூள்சிந்தவே
கருங்கல்லைப்பெண்ணாக்க விலையோ

தோணாதுபோலவே கஞ்சனொடுபாரதஞ்
சூட்டியின் முடிக்கவிலையோ
தொல்லுலகமியாவுமின் னுந்தியிற்காணவே
சூத்திரம்விளைத்த திலையோ
நாணாமல்கவுரியன் முனற்பரியதாக்கியே
நாரிதனைக்கொணர விலையோ
நரசிங்கரூபமாய்க் கற்றூணிடைத்தோன்றி
நல்வினைவிளைக்க விலையோ
வீணானவென்மனம் பணியும்படிக்கருள்செய்
வித்தைகளுனக் கருமையோ
வேதாவையீன்றருள் சீதாபிராமனே
மெய்ஞ்ஞான ஜோதிமயமே. 1

ஆருறவுயாருதவி யாருதுணையாருபகை
யும்புவியி லெந்தனுக்கு
ஐம்புலனொடுங்கியே யுன்பதம்வணங்கவே
யறிவென்னுந் தீபமேற்றி
சேருமிடமேயறிந்து தென்னைச்செறிந்துலகில்
திவ்யசம்பன்ன வாழ்வாம்
தேசசமயங்களும் பலமனிதர்செல்கையுஞ்
சிந்தைதனில் யான்மறந்து
பாருலகிலுன்னிரு பதாம்புயத்தடிமையாய்
பண்பிற் பணிந்தேற்றவும்
பத்திவிசுவாசமாய் நம்புமடியேனுடைய
பழவினை யொழித்தாளவும்
மேருநிகரானபுஜ கருடன்முதுகேறியென்
விழிக்கெதி ரெழுந்தருளுவாய்
வேதாவையீன்றருட் சீதாபிராமனே
மெய்ஞ்ஞான ஜோதிமயமே. 2

எவர்சிறியரெவர்பெரிய ரெவர்நிதியரெவர்மிடிய
ரீவுள்ளமனித ரெவரோ
என்றுலகிலவரிடஞ் சென்றெணாதெண்ணியே
யிருளானமல நினைவினால்
தவறிலாத்தவமெனு முயற்சியைத்தேடாமல்
சமுசார சாகரத்தில்
சார்வதாகாலமும் மூழ்கிநிலைகொள்ளாது
தத்தளிப்பது ஞாயமோ
தவநீதிசோரவன மாலிகாபரணவரி
நாராயணா முகுந்தா
நாரதாதியர்பரவு தாமோதராவேத
நாதாந்த பஞ்சாயுதா

விவரமுடனடிமையை யிரட்சிக்கவேகருடன்
மீதேறியென்முன் வருவாய்
வேதாவையீன்றருட் சீதாபிராமனே
மெய்ஞ்ஞான ஜோதிமயமே. 3

ஆமைகேணிலும்வா லணிப்பிள்ளைகொப்பிலும்
ஆமென்ற பழமொழிபோல்
அங்குசீயுந்தமிய னிங்குமாய்கடலிடத்
தலையுந்துரும்பு போலும்
ஊமைகண்டுவகையுறு சொற்பனம்போலுமே
லொன்றுமுறையாம லடியேன்
உபயசெங்கமலபத நாடியுற்றவும்நீ
யுண்மையுரையாத குறையும்
சீமையிற்சொல்லிலே யாவரும்நகைத்திடுவ
ஸ்ரீராம ராமராமா
தேகியென்பார்க்குதவி செய்யாதபேரில்லை
திருமருவு சார்வபூமா
வீமமதகற்றியெனை ரட்சிக்கவேகருடன்
மீதேறியென்முன் வருவாய்
வேதாவையீன்றருட் சீதாபிராமனே
மெய்ஞ்ஞான ஜோதிமயமே. 4

மண்ணாசைபெண்ணாசை பொன்னாசைமூன்றையும்
வாக்குமன நோக்கவில்லை
வைகுண்டவாசனே நின்றிருவடிக்கடியர்
மைந்தன்யான் வாழ்த்துதற்கு
கண்ணாரவேதாரை தாரையாயோடிடக்
கைகுவித் துனதுநாமங்
கனவின்றமறவாமன்முறை யோவெனக்கூவியுங்
கருணைபுரியா திருந்தால்
என்னுனக்குநா னாளடிமையாகவே
னினிப்பிறவி தீர்வதெப்போ
இரவுபகலுன்பெருமை யுன்மகிமையுன்னாம
முண்ணாதிருந்த துண்டோ
விண்ணாடரகமகிழ வெங்கருடன்மீதேறி
விழிகளித்திட வருகுவாய்
வேதாவையீன்றருட் சீதாபிராமனே
மெய்ஞ்ஞான ஜோதிமயமே. 5

ஆசையெனுமகழியும் மோகவலையாமதிலும்
அஞ்ஞான மிக்குநகரும்
ஆணவமலச்சேனை யணுகுதீவினையரசு
பைம்புல னிலத்தின்மேவி

வாசமுடனுன்பத மலர்க்கடிமையாமனதை
வகைமோசவாய் பகைத்தே
வளர்கின்றஅவிவேக தூதர்கைக்கொண்டார்கள்
வாணுளவத் தொழிந்தேன்
நேசம்வைத்தணிமதிலு மோர்சமாங்கொட்டையும்
நிலையிலாவகழி யரசும்
நின்கிருபையாற்பொடிசெய் துன்னடிமையாகவெனை
ரட்சித்ததுன் பாரங்காண்
வீசுபுகழ்செங்கருடன் மீதேறியேழையேன்
விழிகளித்திட வருகுவாய்
வேதாவையீன்றருட் சீதாபிராமனே
மெய்ஞ்ஞான ஜோதிமயமே. 6

அகலமொன்றுபுரமொன்று னன்பர்க்குரைக்கவென்
னலைமனங் கூசவில்லை
அற்பரைக்கண்டாலு நேசித்துமிதிவாங்கு
மாசையள விடுதற்கிலை
ஜெகமெனுங்காட்டினிற் கலியெனும்புலையினைச்
செயிக்கயென்னுற் றிடமிலை
தீனனுய்த்தேம்பியென் னிருவிழியின்மழைமாரி
சிந்தினேன் சிந்தைநொந்தேன்
சுகமுறுவதெந்தநா ளாதிநாள்யானையைச்
சொல்லா லிரங்கியாண்ட
துரிதமாய்நின்கரத் திகிரியாற்பழவினை
தொலைத்தன்பர் கூட்டத்தினில்
விசிதமுடனென்தனை யிரட்சிக்கவேகருடன்
மீதேறியென்முன் வருவாய்
வேதாவையீன்றருள் சீதாபிராமனே
மெய்ஞ்ஞான ஜோதிமயமே. 7

சொன்னதெல்லாமுனது செவிகேட்கவில்லையோ
துயர்நீக்க வரமில்லையோ
தொலையாதகலிபோக்க வருணேக்கமில்லையோ
தூர்த்தனேற்குறுதி யிலையோ
அன்னைமுகநோக்கிய குழந்தைபாலுணலையோ
ஆள்வினைநிறைந்த தில்லையோ
ஆருக்குமுதவிசெய் தாளவிலையோவடிமை
மேன்மனமிரும் பாயதோ
இன்னமும்பக்குவ மெனக்குவரவில்லையோ
இனியெந்த நாளுள்ளதோ
ஈசனுரைவேணுமோ தாஜர்பிணைவேணுமோ
என்னுடல் தளர்ந்துகூனி

வின்னமாகாமுன்ன மேகருடன்மீதேறி
விழிகாணவந்தருள் செய்வாய்
வேதாவையீன்றருட் சீதாபிராமனே
மெய்ஞ்ஞான ஜோதிமயமே. 8

காகமானதுதனதுபார்ப்பின மென்மேலெனக்
காட்சிபெறு சாட்சிபோல
கற்றவர்கணற்றவர்கள் மற்றவர்களுக்கெளிய
கடையினேன் கவிசொல்லியும்
தோகையினடனசங் கீதமருவாசனைச்
சுவைதேறலிவைகள் யாவுஞ்
சுகமெனுந்தொல்லுலகில் வாழவென்பரிவையெலாஞ்
சொந்தமெனமிக நம்பியும்
தாகமாயெனதுநா னெனமகிழ்வின்மூழ்கினேன்
தமியனுக்காவ துண்டோ
சரணகமலங்களிற் பாமாலைசாத்தியென்
சஞ்சலமெலா மொழித்தேன்
மேகநிகர்வண்ணனே கண்ணனேகருடன்மீ
தேறிவிழிகாண வருவாய்
வேதாவையீன்றருட் சீதாபிராமனே
மெய்ஞ்ஞான ஜோதிமயமே. 9

ஆதியந்தமுமிலாச் சங்கரனுநான்முகனு
மகிலம்படைத் தழிப்பார்
அனந்தகல்யாணவரி பரவாசுதேவனே
யன்னைபோன் மன்னுயிர்க்கும்
நீதிநெறிதவறுத தாசாதிதாசர்க்கு
நீயபய சமயமென்ற
நேசர்க்குமுன்னின் றிரட்சிக்கும்ரட்சகனி
ன்னடிமையாளுகினேன்
ஜோதியேசோதனைசெய் யாமலைம்படையுடன்
றுளசிமணி மார்பிலங்க
சுந்தரவிலக்குமி சமேதராய்ப்பூமாரி
துந்துமி முழக்கத்துடன்
மேதினியிலென்றனை யிரட்சிக்கவேகருடன்
மீதேறியென்முன் வருவாய்
வேதாவையீன்றருட் சீதாபிராமனே
மெய்ஞ்ஞான ஜோதிமயமே. 10

மெய்ஞ்ஞானஜோதிமயம் முற்றிற்று.

ஶ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# இரகுராமப்பத்து

உலகென்னுமோர்வனந் தன்னிலாழ்கேணியத
னுள்ளான சிங்கமொன்று
ஓங்குமதயானையோ ரிராளதுரத்தவவ
னோடியத்துரவில் வீழ்ந்து
பலமுள்ள அறுகம்வேர் பததிகால்தத்திசிரல்
பட்சிபோ லூசலாடப்
படமுற்றமாயவா வெலியைத்துரத்தவனு
பலமூல மதையறுக்க
நலமற்றமனிதனைத் தேனீயடிக்கவிவ
ஞவினிற்றேன் றுசிதர
நாகாயுதத்தினொடு நால்வாயுமேற்கொள்ள
நான்கண்ட சமுசாரமே
இலவுகாத்திட்டகிளி யாகாமன்மறைகள்முறை
யிடுமலர்ப் பதமருளுவாய்
என்னுளுமடியார்கள் கண்ணனதேவனே
என்னையாள் ரகுராமனே. 1

அரசனருள்பெற்றபேர்க் கல்லலில்லையொருவர்பகை
யாவதில்லை குறையொன்றில்லை
அதிகாரமேன்மையில் லாததில்லைநிதிமில்லையோ
டியாவரும் வணங்காதில்லை
முரசமுடன்வாத்திய முழங்காதகாலமில்லை
முறைமையற நெறிதவறில்லை
மூர்த்தன்யதிசையெனினு மீதிலெனக்கிச்சையில்லை
மோட்சத்தில் வாஞ்சையாகி
சரசகுணபிரகாசு பரசினையளித்தளிசெய்
சலசலோசன மாதவா
தனியானதிருநாம மினிதாய்நினைக்கவும்
ஜன்மதீவினை தீய்க்கவும்
இரவிமதிகுதிபரவு பெரியகுலதெய்வமே
யேழையேர்க் கருள்செய்தாள்வாய்
என்னுளுமடியார்கள் கண்ணனதேவனே
என்னையாள் ரகுராமனே. 2

விதியினால்வருவதல் லாதுவேறொன்றில்லை
மேன்மையோர் சொல்லிதென்றால்
மேதினியிலுன்றனைப் பூசிப்பதேன்யாக
வேதங்கள் வாசிப்பதேன்
மதியினால்விதியதனை வெல்லலாமென்றுமுன்
மார்க்கண்டர் சரிதையோகம்
வான்சித்துமறலியை மடக்கியாவருமகிழ
வயதுபதினாறு பெற்றார்
துதியினாலுன்பதத் தென்மனக்குறையெலாஞ்
சொல்லிமுறையிட் டுருகினேன்
தொல்லைவினைவந்தெனைச் சல்லியஞ்செய்யாமல்
சுகமுடனிருக்க வருள்வாய்
எதிரிபாவித்தெனைக் கைவிடுதனீதமோ
ஏழையுன்னடிமைக் கடிமையாம்
என்னாளுமடியார்கள் கண்ணானதேவனே
என்னையாள் ரகுராமனே. 3

வெட்டவெளிதன்னிலே கட்டிட்டமேகத்தின்
மின்னலுண்டான வகைபோல்
மேதினியிலுற்பவத் தேகமதிலுன்னுடைய
மெய்யருளிருந் தொளிரவே
நிட்டைவெளியாகியே யறிவைத்துணைக்கொண்டு
நெற்றிமத்திப் பார்வையால்
நீயென்றுநானென்று நடுவின்மத்திசமென்று
நினைவதனை யூடறுத்து
திட்டமுளவுந்தனிரு திருவடிக்கடிமையாய்த்
தெரிசித்து முத்திபெறவே
தீயிலிடுமெழுகுபோ லனுதினமுநாடியே
தேடிமனம்வாடி நொந்தேன்
இட்டகுலதெய்வமே பையராவிற்றுயி
லிரங்கா விரங்கவேணும்
என்னாளுமடியார்கள் கண்ணானதேவனே
என்னையாள் ரகுராமனே. 4

கோணினைக்கிற்றிரண மேருவாமேருவுங்
குணமிலாத் திரணமாகும்
குருநினைக்கிற்கல்வி ஞானமாமோனமாங்
கோதிலா மோட்சமாகும்
வானினைந்தாலுலகில் மும்மாரிபொழியுமழை
மாறின்வண்மாரி தழையும்
வையம்பகைக்கினு முய்யும்வகைவேறில்லை
வாணியருளிற் கல்வியாம்

நீகினைக்கிற்கொடிய கர்மவினைநீங்குமோ
நின்னதரு ளின்னமின்ன
நேரவிலேயோவசட னிசமிலாப்பாவியேன்
நின்னடிமறந்த துண்டோ
ஏவினைக்காமலிம் மாய்கைக்குண்மூழ்த்தினை
யென்றென்னை மீட்டாளுவாய்
என்னுளுமடியார்கள் கண்ணனைதேவனே
என்னையாள் ரகுராமனே. 5

அரசனும்பேரறிவி னன்மனக்கள்ளனை
யன்பெனு மணிக்கயிறுகொண்
டசையாதிறுக்கியுன் னடிமலர்க்கடிமையா
யாக்குவோ மென்னடவிசூழ்
பரிசுள்ளபாட்டையில் வரும்போதுபாழான
பசியாம்பெருங் காற்றினல்
பதறிபெரிமூன்றிடச் சைதன்யவாடவப்
படுமனக் கள்ளனேடே
புரியதாமனமெனும் பாசம்பொடிப்பொடிப்
போயதாலென்று கூட்டும்
பொருளில்லையருளில்லை வெண்ணெய்ப்படுமூன்றுழி
போனகதைபோ லாகினேன்
இரவுபகனின்னும சிவனஞ்செய்யாம
லென்றைக்குன் னளாவனே
என்னுளுமடியார்கள் கண்ணனைதேவனே
என்னையாள் ரகுராமனே. 6

செப்பமுளமானிடர்க் கொருநூறுவயததிற்
செப்பாதி நித்திரையிற்போஞ்
செய்குழவிபாலரிற் பத்துவயதேகிடும்
ஸ்திரீயாசை யொருபத்துமாம்
முப்பதாமாண்டின்மேன் மூன்றுசையற்றரிய
முத்திக்குகந்த பொருளை
முறைமையுடனுடுவது முதன்மையென்றுளவைதரு
மொழியின்படிக் கிசைந்தே
தப்பிதமிலாமலுன் றாமரைச்சரணினை
தனித்தகமிருத்தி வாழ்த்தி
சாஷ்டாங்கஅஷ்டாங்க மாகப்பணிந்தெனது
சஞ்சலமெலா முரைத்தேன்
இப்பிறவிதீர்த்திட ரினிப்பிறவிவாராம
லென்னையாட் கொண்டருளுவாய்
என்னுளுமடியார்களா கண்ணனைதேவனே
என்னையாள் ரகுராமனே. 7

உதயாதிகாலத்தி லொருகடிகையுன்னடிமை
யுன்னும முறையாமலே
ஓயாதசாண்குழிக் கிரைதேடியோடியே
யுயிருடன் செத்தபிணமாய்
வதையாதிமுதலான கொடுமைக்குடன்பட்டு
வஞ்சமன நெஞ்சனுகி
மட்டிக்குலரமர்பாற் சென்றுசமயம்பார்த்து
வள்ளல்நீ யென்றுவாழ்த்தி
புதையலீந்தவரெனப் பூரித்தவ்வவர்தரும்
பொருளையிரு கைக்கொடேந்தி
புத்ரதாராதிய ருடன்மகிழ்விலாழ்மிப்
புண்மையனு காதவண்ணம்
இதயமலர்தன்னிலே யிருபதாம்புயமலரை
யென்றுயான் கண்டுய்வனே
என்னுளுமடியார்கள் கண்ணனைதேவனே
என்னையாள் ரகுராமனே. 8

அம்புவியில்யாவருங் கண்காணநின்னடிமை
யாக்கியென்னை யாள்வதென்றோ
ஆசாபைசாசத்தைத் துரத்தியுன்னருளான
வமுதமுங் கொடுப்பதென்றோ
கும்பலாய்வருகின்ற வினையுன துமகிமையாற்
குறைந்தழித் தொழிவதென்றோ
குணமிலாவைம்புலக் கயவருன்கருணையாற்
குலநாசமாவ தென்றோ
சம்பமாம்புயச் சரண்மலரன்பினுற்
றரிசிக்கு நாள்களென்றோ
சாகரச்சம்சாரமொழி வதென்றோதாசர்
தம்மொடு புரப்பதென்றோ
இன்பரிற்றுன்புவின் பங்களில்லாதநீ
யேழையை மதிப்பதென்றோ
என்னுளுமடியார்கள் கண்ணனைதேவனே
என்னையாள் ரகுராமனே. 9

கள்ளுண்டுதள்ளுண்ட பேயர்போல்மதமேறு
காரானைபோற் பித்தர்போற்
காடென்றுநாடென்று மேடென்றுதெரியாமல்
காசினியெலா மலைந்து
முள்ளுண்டகள்ளமன மூடன்கணில்லாத
மூர்க்கவஞ் சகனுமெனை
மோகவாரிதியின்மூழ் காமனின்மயமான
முத்திவழி கூட்டிநாட்டி

தெள்ளுதமிழ்வாணர்சிவ னடியரரிதாசர்போற்
        சிறுவனுக் கருளளித்தாள்
தேவாதிதேவனே திவ்யவருணாமனே
        திகழ்ஞான வசுதேவனே
எள்ளுக்குளெண்ணெய்போ லெங்குமாயாவுமா
        யிருவினை தொலைக்குமரசே
என்னாளுமடியார்கள் கண்ணானதேவனே
        என்னையாள் ரகுராமனே. 10

இரகுராமப்பத்து முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# கோவிந்தப்பதிகப்பத்து

நாகமேற்பள்ளியா யோகநித்திரைகொள்ளும்
        ராகவ முகுந்தசீமன்
நாராயணாவென்று பாராயணஞ்செய்து
        நாளுந் துதிப்பதற்கு
தேகமோநீர்க்குமிழி சிந்தையோபலவிதஞ்
        செய்கையோ வெகுவிநோதஞ்
செப்பும்வசனங்கோடி தப்பிதமிதற்கென்ன
        செய்வேனினி யாரைநோவேன்
பாகனையமொழிமாதர் மோகவலையிற்சிக்கி
        பஞ்சென்ன நெஞ்சுழன்று
பாழானநரகத்துள் வீழாமலெந்தனைப்
        பட்சம்வைத் தாளுதற்கு
வாகைமேற்கொண்டபுய செங்கருடன்மீதேறி
        வல்வினை யகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
        மாதவா கோவிந்தனே. 1

கருவாய்க்கருப்பையிற் கண்டுண்டுதசமதிக்
        காசினியி லேபிறந்துங்
கருணையுடனுனது திருவடிமலர்ப்பணியாத
        காமிநா னுடல்கூசவும்
உருவாயெனைத்தந்த வன்னை தந்தையருற்ற
        வுறவினர் வெறுத்தேசவும்

உலகவாழ்விற்பழகு பலமனிதர்பேசவும்
உறுகவலையலை வீசவும்
அறுவானவருவினர் போலமதிமோசமா
யாற்றிற்கரைத்த புளியாய்
அவத்தில்வாணாள்கெடுத் தலையுமடிமைக்குனது
அடிமலரளித் தாளவே
மருவீசுமாலைபுய செங்கருடன்மீதேறி
வல்வினை யகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
மாதவா கோவிந்தனே. 2

பொல்லாதவேளையோ செல்லாதகாலமோ
பூர்வம்யான் செய்தவினையோ
பூதபேதத்தில்வளர் மாமாயையாசையாற்
பொய்யான வாழ்வைநம்பி
உல்லாசமாகவே வுண்பதுமுடுப்பதுவு
மோயாம லிரவுபகலும்
உறங்குவதல்லாலுனது திருநாமமந்திரத்தை
யுன்னுவதெல்லா மறந்து
எல்லாமறிந்தவர்கள்போலும் வாயாற்பிதறி
யீடொருவ ரில்லையென்றே
இறுமாந்துதிரிகின்ற வேழையேனென்னை நீ
இப்போ திரட்சிக்கவே
வல்லாண்மையானபுய செங்கருடன்மீதேறி
வல்வினை யகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
மாதவா கோவிந்தனே. 3

போகபாக்கியமாக யில்லறமிருந்துன்னை
பூசைபுரிவோ ரனந்தம்
புலனைந்தடக்கியே மலையேறிமாதவம்
புரியுமுரியோ ரனந்தம்
சேகரமதாகவே நல்லடியாராய்வந்துன்
சேவைசெய்வோ ரனந்தம்
திக்குவேறில்லையென் றக்கறையினுன்னும
தீர்க்கங்கள்வோ ரனந்தம்
மோகமுடன் அஷ்டாட் சரத்தையுளம்வைத்துன்னு
மோனமுனிவோ ரனந்தம்
முத்திக்குயாவரும் பணிவர்யான்முழுமூடன்
முண்டகச் சரணருளவே
வாகுபெறுசெங்கருடன் மீதேறிநாயினேன்
வல்வினை யகற்றவருவாய்

மாயாவதாரனே சீதாபிராமனே
மாதவா கோவிந்தனே. 4

உந்தனுக்கொருகாசு கர்ப்பூரமலர்மாலை
யொளிர்தீபமிஃது செய்தால்
ஓலமிட்டலருவேன் தர்மபரிபாலன்
முகந்துசெய் வோரைமதியேன்
நிந்தனைப்பேச்சலா லுந்தனற்றிருநாமம்
நினைவிலும் பேசியறியேன்
நேமமல்லாமல் நிதியாசைகொண்டேனலால்
நின்பதப் பூசைகுறியேன்
இந்தவிதமெனதுசெய லந்தநந்தாவேழை
யீடேறலென்ன விதமோ
ஈராறுநாமனே சேஷகிரிவாசனே
இப்பேதையைக் காக்கவே
மந்தரகிரிக்குநிகர் செங்கருடன்மீதேறி
வல்வினை யகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
மாதவா கோவிந்தனே. 5

காட்சியாய்நின்னுபய கமலப்பதந்தனைக்
காணும்வகை தேடுவழியுங்
காணுமனக்குறையி னுற்கவலைகொண்டயர்வு
கண்டுநின் றேமாறியும்
வீட்சணகடாட்சமுட மெய்யன்பருக்கடிமை
வேலைசெய வேசாறியும்
வீணனமாயமேர் கத்தினல்வாணுள்
விடுப்பதோமெய்க் காட்சியே
தாட்சியாய்க்கோடிபிழை செய்தாலுமெள்ளளவு
தாட்சண்ய மென்பதிலையோ
சர்வஜனரட்சக தயாளுநீயல்லவோ
தற்காக்க நல்லசமயம்
மாட்சிபெறவாச்சுதென் றேகருடன்மீதேறி
வல்வினை யகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
மாதவா கோவிந்தனே. 6

ஆனாலுமென்கொடுமை பனியாயமனியாய
மகிலத்தி லென்போலிலை
அனீதமாய்மதனுக்கு நமனுக்கும்வாணு
ளவத்திலொப் பித்ததல்லால்

ஊனுறுமுடலைவிட்டுயிர் போகுமுன்னமுன்
னுலவாப் பெரும்பதத்தை
யுறுமறிஞனருளினுற் கண்டுண்மைநாடா
துலைத்தபெறு மாய்கையதனல்
நானுனதென்றதோ ராணவப்பேய்கொண்டு
நன்மார்க்க வழிவிட்டபின்
நாயினுங்கடையான நாயினேனுன்கருணை
நாடினே னுட்செல்லுமுன்
வாணுடர்மண்ணுடர் பணியவெங்கருடன்மிசை
வல்வினை யகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
மாதவா கோவிந்தனே. 7

சீலமுளசேஷசய னுதிருப்பார்கடல்
செல்வனே தசரதற்குச்
செல்வமகவாய்வந் துதித்தஸ்ரீராமனே
சீதாமனோ கரத்தால்
கோலமுளகலியாண ராமாநெடுந்தனுக்
கொண்டகோ தண்டராமா
குணமா துவாக்யபரி பாலராமாதனுக்
கோடியணை செய்தராமா
ஆலகாலத்தைநிக ராவணுதியர்தமை
யழித்தசெய ராமசோமா
அரிப்பிரியைசானகி கனிட்டனுடனமுதுண்
டயோத்திபட் டாபிராமா
மாலையணிராமனே யென்னையாள்கருடன்மிசை
வல்வினை யகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
மாதவா கோவிந்தனே. 8

உலகரட்சகனுநீ யுயிர்கள்ரட்சகனுநீ
யுன்செயலாவ தொன்றில்லை
உந்தனற்கிருபைதா னெந்தனுக்கில்லையோ
வுயிர்த்தொகையில் நானில்லையோ
மலையமலைபோனெடும் வல்வினைவளைந்தென்னை
வாட்டுதே பேயாட்டுதே
மாறுதவறுமை தீமூட்டுதேபிறவிநோய்
வருமென்றபய மாட்டுதே
கலவாமதானமன மொருநிலையினிற்கவலை
கர்மிக்கோர் திக்குமில்லை
கைவிடிலோநின்னன்ப ருன்னைநம்பாரினிக்
கனகாம்பரா மணிதரா

வலமைபெறுசெங்கருடன் மீதேறிகண்காண
வல்வினையகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
மாதவா கோவிந்தனே. 9

துக்கசுகபோகமாய் வளர்கின்றயிருவினைத்
தொடரினுடை லுருவமாய்
தோகையர்கண்மோகவலையா முலைமேலாசையும்
சொர்னமலை மேற்பாசமும்
அக்கிசக்கொடியர்பா னேசவிசுவாசமும்
அருமையறியார் நேசமும்
ஆனந்தமென்றியா னகமகிழுபாசமும்
அரிசந்த மணவாசமும்
தக்கயிகபோகமென் றுக்கெனுமனத்தையான்
தமதுதிருவடியினீழல்
தாழ்த்திவாழ்த்தாமல்வல்லிரு ளானமாய்கையிற்
றமியேனுலைந் தழிந்தேன்
மக்கள்தொழவாழ்கின்ற கருடன்மீதேறியென்
வல்வினை யகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
மாதவா கோவிந்தனே. 10

கோவிந்தப்பதிகப்பத்து முற்றிற்று.

---

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# சிந்தைகுடிகொண்டபதிகம்

ஆசிரியவிருத்தம்.

சங்கையறவேதாந்த சித்தாந்தநீதிநெறி
சாத்திரமெலா முணர்ந்த
சாதுசங்கச்சன்னி தானத்தடைந்தியான்
றாழ்ந்தடியின் முடிசூடியே
பங்கசவிலோசன பரந்தாமகீர்த்தனம்
பாடாமல் பருமந்திரம்

பன்னுமலுன்னுபய பதமலர்க்கூழியம்
பண்ணுமல் விண்ணணமாய்
சங்கணியுமாதர்தோள் சார்ந்தினரைச்சேர்ந்து
சஞ்சலக் குழியிலாழ்ந்து
தலையெடுக்காமனேய் வறுமையாற்சிறுமையாய்த்
தமியேனுனைத் துதித்தேன்
திங்களணிபணிவதன சங்குசக்ராதரா
தீவினையகற்றி யாள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடி கொண்டகுருவே 1

சுயமானசாயுச்சிய பதவியானடையவே
தொல்லுலகி லுன்னிசிதமும்
துதிசெய்துமதியினுக் குறுதிமொழியிவ்வேளை
சொல்லுமென் றுனைநம்பினல்
அயனுரமைத்தபடி பயனகவனுபோக
மாமென்று மவ்வவர்வினை
அனுபவித்திடவேண்டு மென்றுநெறிசொல்லுறைக
ளலறிமுறை யிடுதலாலே
பயமானபாவியென் பயனென்றுருமையாற்
பணிந்தாதி மூலமென்றே
பாடினேன்வாடினேன் செய்வதென்றேர்கிலாப்
பதிதனைக் கைவிடாதே
ஜெயகருடகேதனச் சங்குசக்ராதரா
தீவினையகற்றி யாள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடி கொண்டகுருவே. 2

எந்தனுக்குப்பாக்ய மீந்தவற்குன்னரு
ளிருக்குமே னின்மனைவியால்
எனையாள்வதருமையோ வென்கணவனுன்மைந்தன
லென்பிறவி நீக்கலரிதோ
சொந்தமுளதாசரொடு பந்தப்படுத்தினின்
றொண்டனென் றுள்வதரிதோ
தொகைப்புரட்டோவுன்ன லாகாதகாரியந்
தொல்லுலகில் சொல்வதுளதோ
கந்தமாதனமுனிவ ரரிபிரமர்யாவருங்
கைகுவித்திடு தெய்வமே
காசினியிலளவற்ற தொல்லையிற்சேர்த்தெனைக்
கண்கலங்கச் செய்தெனை
சிந்தைவேகத்தின்முன வருகடனேறியென்
தீவினையகற்றி யாள்வாய்

சீதாபிராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடி கொண்டகுருவே. 3

சந்ததஞ்சந்திரனைக் கண்டவிருள்போலவும்
தழல்கண்ட சருகுபோலும்
தபனனைக்கண்டபனி போலவுஞ்சிங்கத்தை
தந்திகண்டி டுதல்போலும்
வந்தனைசெய்யுந்தாசரைக் கண்டுவாழ்த்தவகை
வாராத மூடர்போலும்
வாடினேன்மாபாவி கேடுறுவண்ணநீ
மனதுவைத் தாளவேணும்
செந்தமுளநின்னடிமை யிந்தவினையூடுபோம்
சேராம லாளாவிடிற்
றொலையாதகிந்தனையுனக்கு நான்சொன்னேன்
துரோபதை தனக்கருள்செயும்
செந்திகிரியுஞ்சங்கு தங்குபுயகாருண்ய
தீவினையகற்றி யாள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடி கொண்டகுருவே. 4

புக்காதகருவில்லை புசியாதநீரில்லை
புரளாத பொழிலுமில்லை
புண்ணியஞ்செய்வதிலை பிழைமோசம்விடுவதிலை
பூரியேன் காரியமிலை
மிக்கானவேத மூதல்வேதனுங்காணாத
விக்ஞான ஜோதிமயமே
மெய்யாகுநின்னுபய செய்யதாளைப்பைய
வித்தைமன வீட்டிருத்தி
அக்ஞானமாமடவி யைச்சுட்டெரித்ததி
லகங்கார மிருகமோட்டி
ஆசைவலையைக்கொய்து தாசானுதாசனு
ளுகும்படிக் கருள்செயத்
திக்காருமில்லைநீ கதியென்றுநம்பினேன்
தீவினையகற்றி யாள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடி கொண்டகுருவே. 5

மூவாசையுங்கொண்ட வென்கொடுமைபோலிந்த
மூவுலகி லொருவருண்டோ
மூதறிவிலாமலே பாதகத்தொழில்செயு
மூர்க்கனெனை யன்றியுண்டோ

பரவாசுபாடநற் பாவோடுவார்கள்போற்
பகர்பேதை யென்னிலுண்டோ
பணங்காசுதுணிமணிக ளென்றுபகலிரவும்
பறப்பவர்க ளென்னிலுண்டோ
நாவாசையாலுனது திருமந்திரத்தையென்
னுவினிலுரைத்த துண்டோ
நால்வர்சபைகூடியே நின்புகழ்பஜனைசொல்
நான்செவிகொடுத்த துண்டோ
தேவாதிதேவனீ யறியாததொன்றில்லை
தீவினையகற்றி யாள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடி கொண்டகுருவே. 6

உடலைவிட்டுயிர்பிரித லின்றைக்குநாளைக்கு
வொருகணத் தென்பதில்லை
உலைவாயின்மெழுகென்ன வுருகிகண்ணீர்பெருகி
யோடியிறை தேடிநாடி
மடைவாயினீரென்ன வாய்வரண்டனுதினம்
வாடிமனை வாழ்க்கைதேடி
வந்தபின்கொஞ்சபோகத்தில் விளையாடிநன்
மனைமக்களைக் கூடியே
இடைமீதிருந்தபட் டாடையையிழந்தமதி
யீனர்போற் காலமெல்லாம்
இப்படிகழித்தனன் நீகிடைத்ததுங்கன்ம
மென்னவுன்னின பெரியதோ
திடமுடனேதடதடென கருடன்மிசையோடியென்
தீவினையகற்றி யாள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடி கொண்டகுருவே. 7

மன்னவாகேசவா நாராயணசௌரி
வனமாலி வாசுதேவா
மாநிலமளந்தவா மனகூர்மநரசிங்க
மாதவா மணிமாலையா
உன்னுநின்னுமமே பன்னிநானுன்னினு
மெள்ளள விரக்கமிலையே
என்னிடவதிஷ்டமுனை யோகொடியபாவியா
னென்னமுந்நாட் செய்வினையோ
அன்னை தந்தையர்கள்போ லாதரிப்பவர்களுனை
யல்லாமல்வேறு கொளலோ
அபிஷேகமுடிகொண்டு வனுமச்சமேதரா
யரசுபுரிவிரசை யரசே



தமிழ்நாடு ... நூலகம்
183215
சென்னை 600 008

சின்னமில்லாதவட் டாக்கரத்தெய்வமே
 தீவினையகற்றி யாள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
 சிந்தைகுடி கொண்டகுருவே. 8

நெஞ்சைப்பிளந்திரணி யன்றனைக்கொன்றதும்
 நெறியுள்ள தசரதற்கு
நீண்டசேடன்சங்கு திகிரியம்பிரியாம
 னீமகனெனப் போந்ததும்
வஞ்சகத்தாடகைச் சுவாகுவைமுடித்துவரு
 வழியினிற் பெண்ணானதும்
மங்களமதாகவே திங்கள்குலஜனகியை
 மாலையிட்டேர்புக்கதுவும்
அஞ்சியேசிற்றன்னை யாற்காடடைந்துமறை
 யந்தணர்க்கருள் தந்ததும்
அழகானபஞ்சவடி யுற்றுசவுரிக்கரு
 ளளித்துஞ் சயமுற்றதுவும்
செஞ்சிலைக்கோதண்ட ராமனேமெய்யெனிற்
 றீவினையகற்றி யாள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
 சிந்தைகுடி கொண்டகுருவே. 9

அணில்மேலருங்கொம்பு தன்னிற்கவிக்கநீ
 ராமசிலையாக விலையோ
அந்தரத்தனின்மேக முந்தக்கலாபங்க
 ளாடிமகிழ் கூடவிலையோ
துணிவாகுமாமைமீன் சிந்தைகண்பார்வையாற்
 றேன்றிய கருக்களிலையோ
துணையாகயுன்றனுக் கடிமைதானனபின்
 றொல்வினை துடைப்பதரிதோ
பணிசுமக்காதநற் பாறையோபுசைவற்றி
 பச்சைநிறமற்ற மரமோ
பரமசிவனணிகின்ற பாம்புவாழ்புற்றேவிப்
 பாவியேன் செவியிரண்டும்
திணிகொணின்னிருசெவிக் கென்சொல்வரவில்லையோ
 தீவினையகற்றி யாள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
 சிந்தைகுடி கொண்டகுருவே. 10

சிந்தைகுடிகொண்டபதிகம் முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# ஆதி ஸ்ரீரங்கப்பதிகம்

கஞ்சாவுமபினியுஞ் சாராயவகைகளுங்
கள்ளுமாமிசமும் வைத்து
கண்மூடிபெண்ணாசை யைக்கருதிரிட்டையிற்
காத்திருப்பார்களந்த
நஞ்சானபிறர்வஞ்ச மாயத்தைநிசமென்று
நல்லறிவழிந்து நிதமும்
நன்மார்க்கவழியெலாந் துன்மார்க்கவழியென்று
நம்பிகும்பிக் கலந்து
நெஞ்சாரவளவற்ற களவுகொலைகாமங்கள்
நீங்காத கோபலோப
நிர்மூடனானுன்ப ருடமருவலரிதென்று
நெட்டுயிர்ப் புற்றகாலம்
அஞ்சாதேயென்றனக் காதரவுசொல்லவே
யந்தரத் தானமாக
அன்பாகிமுன்புவந் துபதேசமருள்செய்த
வாதியே ஸ்ரீரங்கனே. 1

பேசாதமௌனியுட் புறம்பொன்பதாம்பெரியர்
பேசுமனை மக்களாசைப்
பேய்கொண்டுபசுவினிற் றேபார்த்தவுழுமைபோற்
பொய்யைமெய் வேடமாக்கி
தேசாதிதேசமுந் தீர்த்தங்களாடிநம்
திருவடிகளைப் பணிந்தால்
தீவினைகள்தீருமென் றாசீர்வதித்துத்
திருத்துளவ நீருமீந்து
வாசாகயிங்கிரிய வார்த்தைசொல்வாரந்த
வஞ்சகர் தமைப்போலியான்
மனதொன்றுநினைவொன்று காசாசைமேற்கொண்டு
வாடியழுமெனை யஞ்சலென்
றுசாபசாசைத் தூரத்திராயடியனேற்
கந்தரத் தானமாக
அன்பாகமுன்புவந் துபதேசமருள்செய்த
வாதியே ஸ்ரீரங்கனே, 2

பாவியேன்பொல்லா கோவியான்கொஞ்சமா
பாவியான் பெரியோர்களைப்
பணியாதபாவியா னேன்பிறந்தேனையோ
பார்க்கவே சுவரிலெழுதும்

ஒவியம்போலவே வுருவெடுத்தேனலால்
ஒருவர்க்கு மென்னையிட்டு
ஒத்தாசையுதவிதா னிதுவரையிலுண்டுமோ
உலகளந் தவனேயெனக்
கூவியேதமிழினல் தோத்திரஞ்செய்தனன்
கோதண்ட ராமராமா
கோபாலகிருஷ்ணனே பாற்கடலிலேபள்ளி
கொண்ட நரசிம்மரூபா
ஆவிதானுடலைவிட் டகலுமுன்பாகநீ
அந்தரத் தானமாக
அன்பாகிவந்தெனக் குபதேசமதுசெய்த
வாதியே ஸ்ரீரங்கனே. 3

தென்புடனேயாவருந் திருமால்தனக்கடிமை
செய்வோர்கள் தங்களுக்கு
தீவினையகன்றுபோ மென்றதாலுன்றனைத்
தியானமே செய்யவுறுதி
நம்புதலையெந்தனுக் கொருநாளுமில்லையே
நானிதற்கென்ன செய்வேன்
நாராயணாவேத பாராயணாவென்று
நம்புமடி யார்களுக்கு
சம்பிரமதாய்வந்து முன்னின்றுன்னருளீந்து
சகலவரமுங் கொடுக்கும்
தாமோதராவுனது மகிமையைத்தமிழினற்
சாற்றுதற் கெளிதாகுமோ
அம்புவியில்யாவருங் காணவேயெந்தனுக்
கந்தரத் தானமாக
அன்பாகிவந்தெனக் குபதேசமதுசெய்த
வாதியே ஸ்ரீரங்கனே. 4

ஆற்றிலேவருகின்ற வெள்ளமதுபோலவென்
னறிவுதனி லுந்தனற்றுள்
ஆனந்தமாகவே பொங்கிவருவெள்ளமதை
யான்கண்டு மகிழாமலே
சோற்றுடலையழியாத பொருளென்றுயெண்ணினேன்
தோகையர்கள் மாய்கையதனல்
சுழல்வண்டுபோலவே யலைகின்றமனமுள்ள
துஷ்டர்க ளிணக்கமுற்றேன்
கூற்றுவன்போலெனைக் காமவினைபோராடிக்
கொல்லுமெதன் செய்வனையோ
கொண்டல்நிகர்வண்ணனே கேள்விமுறையில்லையோ
குவலயந் தன்னிலுந்தன்

ஆத்மகுருவாகியே தேவரீரெங்தனுக்
கந்தரத் தானமாக
அன்பாகிவந்தெனக் குபதேசமதுசெய்த
வாதியே ஸ்ரீரங்கனே. 5

கட்செவியின்மீதிலே பள்ளிக்கொண்டவனுநீ
கஞ்சனை வதைத்தவனுநீ
கபடநாடகனுநீ யாதிநாள்யானையைக்
காத்தருள் புரிந்தவனுநீ
பச்சைநிறமாகவே வளர்கின்றமாலுநீ
பாருலகளந் தவனுநீ
பதியுநீகதியுநீ யடியார்களுள்ளமதில்
பண்பாயிருப் பவனுநீ
இச்சையாயுந்தனற் பாதமேகதியென்று
யெண்ணுவோர் தங்களுக்கு
யிகபரமிரண்டினுன் மேலானவாழ்க்கையுட
னின்பங் கொடுப்பவனுநீ
அச்சுதானந்தனே தேவரீரெங்தனுக்
கந்தரத் தானமாக
அன்பாகிவந்தெனக் குபதேசமதுசெய்த
வாதியே ஸ்ரீரங்கனே. 6

ஒருவேளைபோசனஞ் செய்துனை வணங்கவெனி
லுடலொத்து வருவதில்லை
உளமதிலளவற்ற கள்ளமதிருப்பதால்
உறுதியோ நிற்கவில்லை
திருவுறையுமார்பனே யுந்தனைக்கண்டியான்
தெரிசனஞ் செய்வதற்கு
திஷ்டியோ திறமில்லைநீ யுளஸ்தலமதில்
சிலநாளிருக்க வென்றால்
திருவாகமெந்தனுக் கில்லாதிருப்பதுன்
நெஞ்சென்ன வறியாததோ
நீதியாயெந்தன்வர லாறுகேளிவ்வாறு
நெட்டுயிர்ப் புற்றலைந்தேன்
அரிவையர்கள்மோகவலை தன்னிலேவீழாம
லந்தரத் தானமாக
அன்பாகிவந்தெனக் குபதேசமதுசெய்த
வாதியே ஸ்ரீரங்கனே. 7

கருமவினையதனாலே வருகின்றபிணிகளைக்
கண்டுநான் சொல்வதென்ன
காகுத்தனேயுனது வுள்ளமறியாததோ
கருணைகடாட்சகுருவே

மருமவலிமோகமும் நீரிழிவுகுட்டமும்
மாருத வயிறுவலியும்
மாலையொடுசூலையும் பித்தமொடுவாதமும்
மண்டையிடி காச்சலுடனே
இருமலுடன்வாழ்கின்ற மந்தாரகாசமும்
இன்னமு மனேகவிதமாம்
எளியேனையிதுவெலா நாடாமலுந்தனல்
லிணையடிகளைப் பணிந்தேன்
அருமறைகள்தேடியுங் காணுதவஸ்துவே
யந்தரத் தானமாக
அன்பாகிவந்தெனக் குபதேசமதுசெய்த
வாதியே ஸ்ரீரங்கனே. ௭

தூண்டனிலுதித்தரணி யென்முனலிரணியன்
றஞ்சகெழின் மார்புகின்ற
துஷ்டநிக்கிரக சிங்கசிஷ்டபரிபாலனே
தொல்லுலகி லுந்தனடிமை
சாண்வயிர்வளர்த்திடுந் தாபத்திரியங்களாற்
றமுட்கவிதை பாடியாடி
சண்டாளர்தங்களைக் கொண்டாடிநித்தமுஞ்
சங்கடப்பட் டுழன்று
வீண்பொழுதுபோக்குவ தெலாமுனது சமுகமதில்
மெய்யாகவே யுரைத்தேன்
வேதவேதாந்தனே சிதரமுகுந்தனே
விண்ணவர்க் கணிசெயரசே
ஆண்மைதலையாயெனக் காதரவுசெய்யநீ
யந்தரத் தானமாக
அன்பாகிவந்தெனக் குபதேசமதுசெய்த
வாதியே ஸ்ரீரங்கனே. ௮

ஊர்பேரிருந்தென்ன வொத்தாசையாயெனக்
குற்றுரிருந் துமென்ன
உறவாயிருந்தென்ன பகையாயிருந்தென்ன
வுறுதியா யென்னையீன்ற
பேர்தானிருந்தென்ன பெண்டீரிருந்தென்ன
பிள்ளைகளிருந் துமென்ன
பெருமையாயுலகமதை யாள்கின்றவரசனற்
பிரியமு மிருந்துமென்ன
சீர்தானிருந்தென்ன யானையொடுகுதிரையுஞ்
சிமைகளிருந் துமென்ன
தெண்டனைகள்செய்கின்ற சண்டனிடபாசமது
சேர்த்தெனைக் கட்டும்வேளை

ஆர்தானிருந்தென்ன வென்னுயிர்க்காதார
மாமோ கஜேந்த்ரவரதா
அன்பாகிமுன்புவந் துபதேசமருள்செய்த
வாதியே ஸ்ரீரங்கனே. 10

ஆதி ஸ்ரீரங்கப்பதிகம் முற்றிற்று.

---

ஸ்ரீராமஜெயம்

# இராமப்பத்து

கடலிலலையலைவது போனிதமுமெந்தன்
கவலையினாலறிவழிந்து கவியால்வாடி
உடல்மெலிந்துயரனிருந்தால் பாவிமாயம்
ஒழிந்திடுவதெவ்விதமோ வுலகமீதில்
விடமெனவேயெனைத்தொடரும் துன்பம்நீக்கி
வெயிலொளிபோலுன்பாதம் விளங்கச்செய்வாய்
நடனமிடுபரிநகுல சகாயனான
ராமாவென்றுந்தனைநா னம்பினேனே. 1

கற்பகதருவாமுனது செய்கையென்றுங்
கயிலாசநாதரென்றுங் கவிகள்பாடி
அற்பரிடஞ்சென்றெனது தளர்ச்சியெல்லாம்
அறிவழிந்துயானோதி நிதமலைந்திடாமல்
விற்பனஞ்சேருன்கிருபை யெனக்குநல்கி
வெயிலொளிபோ லுன்பாதம்விளங்கச்செய்வாய்
நற்புலவரமரர்தொழும் ஞானசோதி
ராமாவென்றுந்தனைநா னம்பினேனே. 2

எந்தனிடயோசனையுந் துன்பவாழ்வும்
இரவுபகலென்னுளத்தி லிடைவிடாமல்
சிந்தனையேசெய்திருந்தா லெந்தனுளுன்
றிருவடிக்குநானடிமை செய்வதையா
வித்தைபெறவேயெனது கவலைநீக்கி
வெயிலொளிபோலுன்பாதம் விளங்கச்செய்வாய்
நந்தகோபாலனென வந்தஜோதி
ராமாவென்றுந்தனைநா னம்பினேனே. 3

மாடுவீதிபெண்டுபிள்ளை யுலகமியாவு
மறந்துந்தன்மலரடியை வணங்குதற்கு
மூடமெனுமிருள்விலக ஞானதீப
முகுந்தனேயெனக்களித்து முத்தியான
வீடுதனிலென்னுளு மருவிவாழ்க
வெயிலொளிபோலுன்பாதம் விளங்கச்செய்வாய்

நாடுமயோத்தியினரச னீன்றவீர
ராமாவென்றுந்தனைநா னம்பினேனே. 4

பத்தியுள்ளபசுவீழ்ந்தா லுலகிலுள்ளோர்
பரதவித்துமனமிரங்கி யெடுப்பார்துஷ்ட
புத்தியில்லாப்புலிதனக்கு யாருதவிசெய்வார்
பிறவியெனும்பெருமடுவிற் பொய்யன்வீழ்ந்தேன்
வித்தகனேயெனக்கெவரே நின்னையன்றி
வெயிலொளிபோலுன்பாதம் விளங்கச்செய்வாய்
நத்தம்வளர்கோசலைநா டாளவந்த
ராமாவென்றுந்தனைநா னம்பினேனே. 5

அகலியென்னசோதரமோ பிரகலாதன்
அண்ணன்மகனோவனுமா னம்மான்றானோ
ஜெகமதனிற்பாண்டவர்கள் தாதைதானோ
சிறியதந்தைவீடணனோ நானெல்லானோ
விகிதமூடனெந்தனை நீயாள்வதற்கு
வெயிலொளிபோலுன்பாதம் விளங்கச்செய்வாய்
நகமதினாலிரணியனை வென்றசிம்ம
ராமாவென்றுந்தனைநா னம்பினேனே. 6

எண்ணெயுளமட்டுமல்லால் விளக்கின்ஜோதி
யிருண்டிடிலோதம்மாமவ் வியற்கைபோலே
மண்ணுலகிலென்னுடலு முயிரும்வேறாய்
மாறுமிடத்துறுபிணமா மலர்க்கையாலே
வெண்ணையள்ளியுண்டவனே யெனக்கிப்போது
வெயிலொளிபோலுன்பாதம் விளங்கச்செய்வாய்
நண்ணைதிருமந்திரஞ்சேர் நற்சீதாபி
ராமாவென்றுந்தனைநா னம்பினேனே. 7

தஞ்சமென்றவடியேனைக் காத்திடாமல்
சம்சாரசாகரத்திற் றளர்ச்சிகூற
வஞ்சகமாய்த்தள்ளிவிட்டா லெந்தநாளுன்
மலரடிக்கீழடிமைசெய்ய வருவதையா
விஞ்சையர்கள்மகிழ்ந்திடவே யிந்தவேளை
வெயிலொளிபோலுன்பாதம் விளங்கச்செய்வாய்
நஞ்சமுண்டபரமசிவன் மகிழ்பட்டாபி
ராமாவென்றுந்தனைநானம்பினேனே. 8

திடத்துடனின்னடிமையெனச் சேர்ந்தவென்னைச்
செகமதனிற்றீயர்தம்பாற் சேர்த்திடாமல்
கடத்தயிராபதநிகராங் கஜேந்திரன்றன்னை
காத்ததுபோலேழைதனைக் காருமையா
விடப்பத்தின்மேற்றுயிலும் விபுதர்கோவே
வெயிலொளிபோலுன்பாதம் விளங்கச்செய்வாய்

நடத்தைகளைப்பொறுத்தாளுஞ் செயகோதண்ட
ராமாவென்றுந்தனை நா னம்பினேனே. 9

அன்னை தந்தைகுரு தெய்வம்நீயேயென்று
அனுதினமுமுனைப்பணிந்தே னடியேன்வாயாற்
சொன்னமொழிதவறாமல் வரந்தந்தாள்வாய்
தோத்திரமாய்க்கவிமாலை பத்துஞ்சொன்னேன்
கன்னல்மொழிலட்சுமியுங் களபமார்புங்
கரமதனிற்றிகிரிசங்குங் கருடன்மீதில்
நன்னயமாயெந்தெனிரு கண்முன்றோன்ற
ராமாவென்றுந்தனை நா னம்பினேனே. 10

இராமப்பத்து முற்றிற்று.

ஆக சந்நிதிமுறை ௯-க்கு பாட்டு-௧௧௧.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# கருடப்பத்து

ஈயாதலுத்தரைநான்போயடுத்துயிளகிமனம்
பேயாய்ப்பறந்தலைந்தென்னுளும்வாடிப்பிதற்றுகின்றேன்
மாயாய்ப்பிறவிமயக்கமறுப்பாயுன்னைவாழ்த்துதற்கு
நேயாய்க்கருடன்முதுகேறிவந்தென்னையிரட்சிப்பையே. 1

தினமுமுன்னாமத்தைநாவாற்றுதித்தென்சிந்தைநொந்து
மனமூடுருகிமயங்குவனோவஞ்சநெஞ்சமின்றித்
தனதாகவாழ்கின்றநின்னடியார்க்கடித்தாணிதமும்
நினைவாங்கருடன்முதுகேறிவந்தென்னையிரட்சிப்பையே. 2

வாயேனிருந்தென்னசெய்வதுகூற்றன்வருமளவில்
ஆயோனையுன்பாதநான்பணிந்தேனிந்தவம்புவியில்
நாயேனுக்கோர்துணைவேறுமுண்டோவரிநாரணனே
நீயேகருடன்முதுகேறிவந்தென்னையிரட்சிப்பையே. 3

உறியேறிபாலனைவெண்ணைகையாலெடுத்தோடியுண்ட
பொறிசேரகலப்புயாசலனேநெறிபோக்கியபொய்ச்
சிறியேனைநின்னன்பர்தொண்டனிற்சேர்க்கத்திருவடியாம்
நெறியேகருடன்முதுகேறிவந்தென்னையிரட்சிப்பையே. 4

நரேழுலகினினின்னையல்லாமலெனக்கினிதாய்
பாரோர்புகழ்தெய்வநரன்பணியேன்பணியாதனனே
சீரோர்பொருந்துமடியார்கள்போற்றத்திருவுடனே
நேரேகருடன்முதுகேறிவந்தென்னையிரட்சிப்பையே. 5

சனந்தானில்லானரைக்காசுகொடாதகசடரென்னைச்
சினந்தேநிதம்வகைசெப்புகின்றாருன்செயலறிந்து

மனந்தானிரக்கங்கொளாதவுறுகணன்வாடுமிடர்
நினைந்தேகருடன்முதுகேறிவந்தென்னையிரட்சிப்பையே. 6

ஒதிபெருத்தாலென்னவுத்திரந்தூணுக்குதவியுண்டோ
கதிமறுத்தன்னைகருப்பையுற்றேன்கமலக்கண்ணனே
மதிகொடுத்துன்றிருநாமந்துதிக்கவரமருளும்
நிதிபடைத்தோய்கருடன்மேலெழுந்தென்னையிரட்சிப்பையே. 7

துக்கப்பயிர்விளையும்மனத்தோட்டநற்றேற்பையுளும்
விக்கலுங்சக்கலுமுக்கியமாம்வினையேன்றுயரம்
புக்கிடமின்றிப்பொடியாகச்சாய்க்குநற்பொற்சிறகை
நெக்குங்கருடன்முதுகேறிவந்தென்னையிரட்சிப்பையே. 8

இரைந்தேயுனதுதிருநாமந்தன்னையிரவுபகல்
கரைந்தேமனதுகவலைவிண்டேனென்னைகாத்தருள்வாய்
விரைந்தேவருகவிதுவேளைவேலைவெதும்பமணி
நிரைந்தேகருடன்முதுகேறிவந்தென்னையிரட்சிப்பையே. 9

மத்தகத்தானைமுன்வாய்திறந்துன்பெயர்வாழ்த்தவருள்
வித்தகத்தாழிவிடுத்தளித்தோய்வினையேன்பவத்தை
சித்தமதிற்பொறுத்தெந்தெனையாளத்திருவுடனே
நித்தங்கருடன்முதுகேறிவந்தென்னையிரட்சிப்பையே. 10

கருடப்பத்து முற்றிற்று.

ஆக-சந்நிதிமுறை ௰-க்கு பாட்டு-௧௨௧.

---

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# போற்றிப்பத்து

நாரணாபோற்றிபோற்றி நரசிம்மரூபாபோற்றி
காரணக்குருவாய்வந்தென் கவலையைத்தீர்ப்பாய்போற்றி
வாரணந்தன்னைக்காத்த மாதவாபோற்றிபோற்றி
சீரணிந்திறங்கிவாழும் ஸ்ரீரங்கநாதாபோற்றி. 1

வாமனரூபாபோற்றி மணிமச்சகூர்மாபோற்றி
ராமனேராமாபோற்தி நற்பதந்தருவாய்போற்றி
காமனையீன்றாய்போற்றி கபடநாடகனேபோற்றி
சேமமாயென்னையாளும் ஸ்ரீரங்கநாதாபோற்றி. 2

செங்கண்மாலரியேபோற்றி திருமகள்கொழுநாபோற்றி
சங்கணிகரத்தாய்போற்றி தரணியையளந்தாய்போற்றி
இங்கெனக்கருள்வாய்போற்றி எந்தையேபோற்றிபோற்றி
திங்கள்சேர்வதனாபோற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி. 3

அகலிகைக்கருள்வாய்போற்றி அரக்கரைவதைத்தாய்போற்றி
முகினிறைத்தோனேபோற்றி மூர்த்தியேபோற்றிராஜ
மகனெனவந்தாய்போற்றி மாயசெவ்வாபாபோற்றி
ஜெகமுண்டதாதாபோற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி. 4

பஞ்சவர்தூதாபோற்றி பாருலகளந்தாய்போற்றி
வஞ்சனைதீர்ப்பாய்போற்றி வாலியைவதைத்தாய்போற்றி
தஞ்சமென்றோரைக்காக்குஞ் சாரங்கபாணிபோற்றி
செஞ்சிலைக்கரத்தாய்போற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி. 5

அரிரகுராமாபோற்றி யடியவர்க்கெளியாய்போற்றி
கரிதனைக்காத்தாய்போற்றி கஞ்சனைவதைத்தாய்போற்றி
விரிகடற்றுயின்றாய்போற்றி விளங்கனியெறிந்தாய்போற்றி
செருவினைவென்றாய்போற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி. 6

மாயனேபோற்றிபோற்றி வரமதுதருவாய்போற்றி
ஆயனேபோற்றிபோற்றி யடியனுக்கருள்மீக்கொண்டு
தாயனேவருவாய்போற்றி தசரதராஜனீன்ற
சேயனேபோற்றிபோற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி. 7

எந்தையேபோற்றிபோற்றி இமையவர்க்கரசேபோற்றி
சிந்தையிற்குடியாய்க்கொண்ட தெய்வமேபோற்றிபோற்றி
பந்தம்வேரறுப்பாய்போற்றி பரப்பிரம்மவடிவேபோற்றி
செந்திருமார்பாபோற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி. 8

முத்தணிமார்பாபோற்றி மூவுலகளந்தாய்போற்றி
இத்தலம்மீன்றாய்போற்றி யேழைபங்காளாபோற்றி
பத்தர்கட்கரசேபோற்றிப் பாசம்வேரறுப்பாய்போற்றி
சித்தம்வைத்தென்னையாளும் ஸ்ரீரங்கநாதாபோற்றி. 9

இருவினைதுலைப்பாய்போற்றி ஏகமானவனேபோற்றி
திருவொடுகருடனேறுந் தேவனேபோற்றியுன்பா
லுருகியானுரைத்ததோத்ர மூலகளந்தவனேபோற்றி
திருவடியெனக்குநல்கும் ஸ்ரீரங்கநாதாபோற்றி. 10

போற்றிப்பத்து-முற்றிற்று.

ஆக சந்நிதிமுறை கக-க்கு பாட்டு கஙக.

---

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# பரப்பிரம்மப்பத்து

என்னால்முடிந்ததிதுநாள்வரைக்குமிரவுபகல்
சொன்னேன் தமிழின்வழியாகவெந்தன் துயரமெல்லாம்
இன்னுளுனதுவருணல்குவாயெளியேன்றனக்கு
பன்னகமேற்றுயில்சீதாபிராமப்பரப்பிரம்மமே. 1

எத்தனையோவுருகோடானகோடியெடுத்தலுத்துப்
புத்திமயங்கியுன்பாதாரவிந்தப்பொருளறியா
தித்தலந்தன்னிலுழல்கின்றநாயினுமென்மைவழிப்
பத்தனைக்காத்திடுஞ்சீதாபிராமப்பரப்பிரம்மமே. 2

செங்கமலத்திருமார்பழகாவுன்றிருவடியை
மங்களமாகப்பணிந்தேனுளத்துனைவாழ்த்திநின்றேன்
இங்கிதமாகவருள்நல்குவாயெளியேன்றனக்கு
பங்கயஞ்சேர்பதசீதாபிராமப்பரப்பிரம்மமே. 3

மின்னர்க்கொடியிடைவேல்விழிமாதரைமேவிநித்தம்
பொன்னுக்கலைந்துனைப்போற்றாமனாளைப்புவியுகுத்தேன்
இன்னிலந்தன்னிலருள்நல்குவாயெளியேன்றனக்குப்
பன்னுதமிழ்க்கருள்சீதாபிராமப்பரப்பிரம்மமே. 4

மச்சமாகூர்மவராகநரசிம்மவாமனனை
அச்சுதநாமத்தரிகிருஷ்ணனையான்பணிந்தேன்
இச்சையதாளாவருணல்குவாயெளியேன்றனக்கு
பச்சைநிறமுள்ளசீதாபிராமப்பரப்பிரம்மமே. 5

இந்திராதிபோற்றியபொன்னரங்கேசனிணையடியைச்
சொந்தமதாகவேநான்பணிந்தேனிந்ததொல்லுலகில்
எந்தையுன்மைந்தற்கருணல்கியாண்டிம்மையம்மைதந்து
பைந்தமிழும்புனைசீதாபிராமப்பரப்பிரம்மமே. 6

சுருதிமொழிந்தமுறைப்படியுன்னைத்தொழுதிரஞ்சிக்
கருதிமுக்காலமுங்கைகுவித்தேனற்கதிபெறவே
இருவினைதீரவருள்புரிவாயெளியேன்றனக்குப்
பருதிகுலத்துற்றசீதாபிராமப்பரப்பிரம்மமே. 7

மாத்தவராகியமங்கையராசையுமாமயக்கந்
தீர்த்தவனேயென்னுருவொழித்தாள்திருவேங்கடவா
ஏத்தமதாயடியார்க்கருணல்குமிருவிழியாற்
பார்த்தெனைக்காத்தருள்சீதாபிராமப்பரப்பிரம்மமே. 8

வையந்தனிற்பையையீயாதலோபியர்வாசல்சென்று
பொய்யுரைசொல்லிப்புகழ்ந்துறவாடிப்பொரிந்துலைந்தேன்
ஐயனேயுந்தனருணல்கியாண்டருளாயிரம்வாய்ப்
பையரவிற்றுயில்சீதாபிராமப்பரப்பிரம்மமே. 9

வேண்டுகிலேன்மண்ணில்வேந்தர்தம்வாழ்வுவிபுதர்செல்வம்
நீண்டபொன்மேன்முடியிந்திரப்பட்டமும்நித்தியமாம்
ஆண்டவனேயுன்னடியார்க்கடியவனாகயருள்
பாண்டவர்நேயாசீதாபிராமப்பரப்பிரம்மமே. 10

பரப்பிரம்மப்பத்து முற்றிற்று.

ஆக சந்நிதிமுறை ௧௨-க்கு பாட்டு ௧௪௧.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# குறுவிருத்தமாலை

பொன்னினாசையும் பூமியினாசையு
மின்னினாசையும் வேண்டிவிரும்பிலேன்
சொன்னகான் றொடருமக்காலையில்
உன்னலுன்பத முள்ளத்துறுதியே. 1

வாவிதன்னில்வன மொண்டமண்குடம்
தாவிலோரிடம் தங்கியவாறுபோல்
ஆவலாவி யுடலுமுன்னாணையே
மேவியோர்நிலை வீடருணாதனே. 2

இரும்புநெஞ்ச மெனுமனத்தீயரை
விரும்பியான்றுதி மேவுதனீதமோ
சுரும்புமொய்க்குந் துளவணிமாலையாய்
அரும்பொன்னாடை யரிகரிராமனே. 3

கடலுப்புநற் கல்லகக்காயுநே
ருடனிசைந்திடிலுண் பாரவ்வாறுபோல்
உடநல்லுயி ரூழ்வினைப்பாலதாம்
அடிமைசெய்தெனை யாட்கொள்ளவேண்டுமே. 4

கள்ளவைம்புலக் கள்ளக்கசடரை
மெள்ளவெட்டு வெளியிற்பிரிந்துயான்
உள்ளமான வொருவனைக்கண்டுசீர்
வள்ளலென்று வணங்கவருள்செய்வாய். 5

பூமிதன்னிற் பொருந்தினரைத்துறை
சாமியென்றுரை சாற்றுதனீதியோ
நேமிகையி லிருத்தும்வச்சஸ்தல
சாமிநம்பினன் றாமரைநாளையே. 6

உனைவணங்க வுரித்தென்னுடற்கரம்
மனமிணங்கும் வகையுளதோவையா
தினமுமிப்படி சிந்தைசிதறினாற்
கனவிலுன்னையுங் காண்பனோகர்த்தனே. 7

ஓர்கலமு மிதின்றிடிலோரவல்
நேர்கிடைக்குமெனு மொழிநிச்சயம்
சீர்பதத்தைத் தினந்துதிசெய்தனன்
கார்வண்ணக்கண்ணா காத்தருளெந்தையே. 8

என்னசொல்லியு மீவிரக்கமில்லை
வன்னெஞ்சாகி மனமிரும்பாகினால்
அன்னமேறு மயன்செயலல்லது
பின்னையானென்றும் பேசுவதில்லையே. 9

படிக்கலாந்திரு நாமத்தைப்பாடியே
நடிக்கலாமுன்று னுடகக்கூத்தையே
பிடிக்கலாநின் னடியார்பொற்றுளையே
இடுக்கிலாமன தொடுக்கமதில்லையே. 10

உன்னையன்றி வுலகினில்வாழ்பவர்
தன்னைநம்பத் தகாதுகண்டாயினி
அன்னையாயெனை யாதரியாவிடில்
பின்னையார்துணை பேசபிராமனே. 11

தாயுந்தந்தையுஞ் சற்குருதெய்வமும்
நீயல்லாதென்ற நெஞ்சினில்வேறுண்டோ
சேயன்றீவினை யாறச்செயாவிடில்
மாயனேயுன் மகிமைகுறையுமே. 12

ஆர்க்குந்தீவினை நோக்கனுகாமலே
காக்குந்தெய்வக் கருங்கடன்மேனியாய்
ஏக்கமாமெனை யின்பம்வைத்தாளுவாய்
தீர்க்கமாஞ்சக நாதஸ்ரீராமனே. 13

வாடிச்சோம்பி வதங்கும்பயிரினுக்
கோடிப்பொய்யு நல்லூரியம்போலவே
தேடிநின்று திளைக்குமெளியனை
நாடிக்காக்கு நாராயணனுமமே. 14

கண்ணுமூக்குஞ் செவியுங்கைகாயமும்
உண்ணும்வாயு முடற்றத்துவமில்லை
நிண்ணிடும்படி நின்னருள்செய்குவாய்
மண்ணும்விண்ணு மளந்தருள்மாயனே. 15

வாக்குநெஞ்சு மனமுங்கலங்கவே
ஆக்கிரமித்தென்மு னந்தகன்வந்திடில்
சீக்கிரமத்திற் றிருவுடன்றோன்றியே
காக்கவேணுங் கருங்கடல்வண்ணனே. 16

வாசமாமலர் மானமதங்கொண்டுனைப்
பூசைசெய்து புகழ்ந்துரையாமலே
தேசமோகத் திருக்கிலலைந்துவீண்
மோசம்போனேன் முராரிமுகுந்தனே. 17

காந்தமூசிக் கலக்கும்புணர்ப்பென
மாந்தர்வாழ்க்கை மயக்கத்திலாழ்ந்தனன்
பாந்தமாகப் படிந்திடுமாயநோய்
தீர்ந்திடச்செய்யுந் தீனதயாளுவே. 18

வெக்கமாகிய பாசவேரற்றிட
தக்கபேரருள் தந்தெனையாளுவாய்
இக்குவேளையு மீன்றநற்றந்தையே
திக்குவேறில்லை ஸ்ரீரங்கநாதனே. 19

எந்தனுள்ளத்திருத்தினின்சீரடி
சிந்தையாறத்தெளிந்துகொள்ளாமலே
பந்தமாகியபாசப்பிணிப்பினேன்
எந்தநாட்கரையேறுவனெந்தையே. 20
நீதியாயுனைநித்தமும்போற்றியே
சாதிவாறுதவிர்ந்துறப்பெற்றிலேன்
ஆதிமூலமென்றியானையழைத்தநாள்
ஓதும்வார்த்தைமுன்னோடியமாயனே. 21
போற்றிசெய்துனைப்பூதலத்தோரெல்லாந்
தோத்தரித்துத்துதிக்குநற்றெய்வமே
கூற்றனென்னுயிர்கொள்ளைகொளாமுனம்
காத்திடக்கடன்கார்நிறவண்ணனே. 22
உரிமையெந்தனுக்குன்பதமல்லது
பெருமைநேரும்பிரபஞ்சமில்லையால்
கருவினாசைகடக்கவெனக்கருள்
திருவளஞ்செறிசீதைமணாளனே. 23
நாளுங்கோளுந்திதியுநட்சேத்திரமும்
தேளும்பாம்புஞ்சிறுமையும்பில்லியும்
வாளுமாமறலிக்கையிற்பாசமும்
மாளவந்தென்னையாளுவைமாயனே. 24
தெய்வமென்றுனைச்சிந்தையிலெண்ணியே
கைகள்கூப்பிக்கசிந்துபணிந்தநான்
வைவன்வாழ்த்துவன்வாதைநோயெய்திலென்
செய்வனின்னருட்சீதாபிராமனே. 25
மாநிலந்தனில்வாழ்கின்றபேரனை
ஈனமாகவிகட்சிசெய்யாமலே
ஞானமாமறைநாடியபாதனே
மோனமாகியமுத்தியளிப்பையே. 26
மாய்கையென்னுமோரன்னைமறித்தனள்
சேயன்ஞானந்திறம்பினனின்பத
நேயமாகியநேசர்க்குத்தாசனை
ஞாயமோகைவிடுதல்ஜநார்த்தனே. 27
உந்தன்பொன்னடிக்கோதுந்தமிழையான்
எந்தநாதற்கியம்பியிறைஞ்சுவேன்
நந்தகோபனசோதைக்குள்ளாநந்த
மைந்தனேமுகுந்தாவாசுதேவனே. 28
எந்தனெஞ்சினிலெண்ணியவெண்ணமும்
நிந்தைமானம்நிகர்விக்கினப்பாக்கியமும்
உந்தனுக்குரித்தென்றுனியுண்மையாய்த்
றந்தனன்தத்தஞ்சாரங்கபாணியே. 29

என்னசெய்குவனென்றுயர் தன்னையும்
பின்னமாயப்பிணிப்பைநோயையும்
சொன்ன துந்தன்றுணையடிநாடியே
இன்னமுங்கேட்கவில்லையோராமனே. 30

குறுவிருத்தமாலை-முற்றிற்று.

ஆக சந்நிதிமுறை ௬௨-க்கு பாட்டு-௧௱௧.

---

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# ஆதிமூலப்பத்து

அனந்தேனமுது தருந்தெய்வமென்றற்பரைத்தமிழாற்
றினந்தோத்தரித்துத்திரிகின்றபேதையின் தீங்ககற்றிக்
கனந்தேறுன துகழலிணைப்போற்றிக்கலலையற
மனந்தானெனக்களித்தாளாதிமூலமகாதெய்வமே. 1

பரியாசமாவுனைநாவாற்றுதிப்பதும்பன்னுதமிழ்த்
தெரியாதபேரிடஞ்சென்றுரையாடிச்சிறுமையெல்லாம்
பரிவாயுரைத்தெந்தனெஞ்சுபுண்ணாகிப்படுந்துயரம்
மரியாதையோவெனையாளாதிமூலமகாதெய்வமே. 2

கலையான்மயக்கியகண்ணார்வலையிற்கசிந்துருகி
நிலையானவாழ்வென்றவர்மனைக்கேகித்தநேசம்வைத்துத்
துலையாப்பிறவிக்கடற்கரையேரத்துணையுமற்றேன்
மலையாமலெந்தனைக்காவாதிமூல மகாதெய்வமே. 3

சொல்லாததோவுன்றிருநாமநல்லுரைசிந்தியினி
னில்லாதோவுன்றிருவடிநின்னடியார்க்குறுதி
சொல்லாததோஜகரட்சகநீதிதொடர்ந்திடின்மேல்
வள்ளாளகண்ட னுநீயாதிமூலமகாதெய்வமே. 4

அன்னாளிலங்கைப்பதிவாழ்ந்தராட்சதரத்தனையுஞ்
சின்னாபின்னம்படக்கோதண்டமேந்துஞ்செயவரதா
பன்னாகமேலினும்பாற்கடலின்மீதிலும்பள்ளிகொண்ட
மன்னாவடிமையைக்காவாதிமூலமகாதெய்வமே. 5

கோவென்றனைக்குஞ்சரங்கூவுஞ்சாலையிற்கோகநகை
தாவென்றவாட்டத்திற்சக்கரத்தாற்சிஞ்சுமாரனைமுன்
நீவென்றகாலமும்நீவந்தகோலமுநினைந்தடைந்தேன்
வாவென்றனையளிப்பாயாதிமூலமகாதெய்வமே. 6

காயாதபாலுற்றவெண்ணெய்ப்போலுநற்காவியத்தை
ஆயாதசொற்பொருட்பாப்போலுமுந்தனருள்விரும்பி

சேயெனவத்திற்றிரிந்திளைத்தேனமன் சேருமுன்னே
மாயாவடிமைகொளுமாதிமூலமகாதெய்வமே. 7

தூதாகிசென்றுமுன்னைவரைக்காத்தநற்சோதியென்றே
வேதன்முதலிந்திரன்விண்ணோரும்போற்றினர்மேதகன்யான்
ஆதாரம்வேறில்லையுன்னையல்லாதடியேற்கருள்
மாதாபிதாகுருநீயாதிமூலமகாதெய்வமே. 8

ஓயாக்கவலைமடுவீழ்ந்துழன்றெந்தனுள்ளமெல்லாம்
தீயாகிவெந்துகருகுதையோ திருவேங்கடவா
தாயாகிவந்தென்னைக்காத்தருள்வாயிந்தத்தாரணிக்குள்
மாயாவதாரனுநீயாதிமூலமகாதெய்வமே 9

துளபாபரணக்கவுஸ்துவநளினிதுதைந்துவுரத்
தளகாவின்சீரடியான்தொழுதேனச்சுதானந்தனே
இளகாதிருப்பதென்னூழ்போக்கினின்னன்பர்க்கேவல்செய்ய
வலமாகவந்தெனைக்காவாதிமூலமகாதெய்வமே. 10

ஆதிமூலப்பத்து-முற்றிற்று.

ஆக சந்நிதிமுறை ௧௬-க்கு பாட்டு-௧௮௧.

---

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# சிந்தையின்பத்து

கண்டாக்கால்முறைமைசொல்லு காணாவிட்டால்
கலீரென்றுபேர்சொல்லுங் கசடலோபச்
சண்டாளப்புலையர்களை அயன்கிட்டித்தான்
சமஸ்தானபதிகளென்று தரணிமீதிற்
கொண்டாடிப்பணக்கார குபேரனென்று
கூசாமல்மாறனென்று கூறியானும்
திண்டாடியலையாமலருள் செய்தாளும்
ஸ்ரீரங்கநாதாவென் சிந்தையானே. 1

இப்பாரினில்விளங்குகின்ற நீதிதன்னை
யெண்ணிமனமுணராத யீனமார்க்கத்
தப்பானபேர்களிடஞ் சென்றுயானும்
சன்மார்க்கநெறியுடைய தனவானென்றும்
ஒப்பாருமில்லையென்றுங் குணவானென்றும்
உத்தமனீயென்றுமித முரைக்குநாவாற்

செப்பாமலெந்தனுக்குன் னருள்செய்தாளும்
ஸ்ரீரங்கநாதாவென் சிந்தையானே. 2

செத்தாலுமரைக்காசு கையைவிட்டுச்
செலவழிக்காவுலுத்தரிடஞ் சென்றுயானும்
மற்றாருமில்லையெனக் குன்னையல்லால்
மகராஜனேயெனது வறுமைதீர
ஒத்தாசைசெய்திடுவா யிந்தவேளை
யுண்மைநெறியுடையவனே யென்றுசொல்லுஞ்
சிற்றாசைதனையொழித் துன்னருள்செய்தாளும்
ஸ்ரீரங்கநாதாவென் சிந்தையானே. 3

நன்மைநலமறியாத பேர்கள்கோடி
நகைவகையும்ஆடைகளு மணிந்தேநெட்டிப்
பொம்மைகள்போலிருப்பார்க ளவர்கள்மீதில்
புகழுடையதமிழ்பாடிப் பொருளைவேண்டி
இம்மைதனிலெளியேனைக் காக்கவந்த
யிந்திரனேயென்றுநிதம் யிரந்திடாமல்
செம்மையுடனெந்தனுக் குன்னருள்செய்தாளும்
ஸ்ரீரங்கநாதாவென் சிந்தையானே. 4

கற்றவர்க்குவித்தையென்ன வறுமையோதான்
காசுபணமெளிதோ நீகருதிக்கேட்ட
பித்தனேபோயெங்கேவந்தா யுனக்குவேறே
பிழைப்பிலையோவென்றுசொல்லும் பேயர்மீதில்
நற்றமிழைப்பாடிநித மலைந்திடாமல்
நன்மார்க்கவழிப்படியே நடப்பதற்கு
சித்தமதுதெளிந்திடவே யருள்செய்தாளும்
ஸ்ரீரங்கநாதாவென் சிந்தையானே. 5

பொல்லாததுன்மார்க்க முள்ளபேரை
போயடுத்துமுகம்பார்த்துப் புகழ்ச்சியாக
வில்லாளிவிஜயனென்றும் நகுலனென்றும்
மேதினியைப்படைத்தளிக்கும் விமலனென்றும்
உல்லாசவில்லாளி மதனனென்றும்
உரைத்துரைத்து அறிவழிந்துஉலகமீதில்
சொல்லாமலெந்தனுக் குன்னருள்செய்தாளும்
ஸ்ரீரங்கநாதாவென் சிந்தையானே. 6

பொய்யானபேர்களிடஞ் சென்றுயானும்
பொறுமையுளதருமனென்றும் வீமனென்றும்
மெய்யானவரிச்சந்திரன் சிபிதானென்றும்
மேதினியையளந்த உபேந்திரன்றானென்றும்

ஒய்யாரமுடையவிக்ரமார்க்கனென்றும்
ஓலைதனிலெழுதியொருகவிதைப்பாடச்
செய்யாமலெந்தனுக்குன்னருள்செய்தாலும்
ஸ்ரீரங்கநாதாவென்சிந்தையானே. 7

மோசமுடன்கொலைகளவுகாமஞ்செய்யும்
மூழுமூடர்தங்களிடமுன்னேசென்று
நேசமுடன்றமிழ்பாடிப் பொருளேசொல்லி
நிச்சயமாயுந்தனிடசமுகந்தன்னை
வாசமுடனம்பிவந்தேனெளியேனென்று
வயிறுவளர்த்திடுங்கருமமனத்திலுன்னித்
தேசமதிலலையாமலருள்செய்தாலும்
ஸ்ரீரங்கநாதாவென்சிந்தையானே. 8

நம்பியிருக்கின்றோர்க்குரெண்டுபேசும்
நயமறியாவுலுத்தரிடம்நாடிநாவால்
சொம்புடனேபதம்பாடிப்புகழ்ச்சியாகச்
சுந்தரமாலுனைப்போலுஞ்சுவர்க்கத்துண்டோ
சம்பிரமமாயெந்தனிடவறுமைதீர
தயவுசெய்வாயென்றுசொல்லித்தமியேன்றனும்
தெம்புடன்வாடாமலருள்நீசெய்தாலும்
ஸ்ரீரங்கநாதாவென்சிந்தையானே. 9

மறந்தொருவேளையினிலரைக்காசுதானும்
வழங்காதலோபியர்மேன்வரிசையாக
நிறைந்தரசத்தமிழ்பாடிப்பொருளைவேண்டி
நித்தமிதுவேலையதாயலைந்துவாடி
இறந்துபிறந்திதுவரையுந்திரிந்தோய்ந்தேய்ந்தேன்
எனையாளும்பொன்னரங்காகதியென்றற்றேன்
சிறந்தருள்சேர்தாசருடன்யானுமொப்பாய்ச்
சேர்ந்தருள்ஸ்ரீரங்காயென்சிந்தையானே. 10

சிந்தையின்பத்து முற்றிற்று.

ஆகசந்நிதிமுறை ௧௫-க்கு பாட்டு-௧௯௧.

---

# அஷ்டாக்ஷரத் திருப்புகழ்

பூமிதனிலேபிறந்து பாலனெனவேவளர்ந்து
பூவையர்கள் பாலையுண்டுவருநாளில்
பூசைமிகவேபுரிந்து ஆசைவெகுவாய்நினைந்து
பூர்வவினையாலடைந்த பொருள்கூடி

காமவழிகேணிவீழ்ந்து மோகமடுவூடிறங்கி
கால்நிலைகொளாமலாடி மனம்வாடி
காயமமராலலைந்து மாயவிருளான்மறைந்து
காதலிபொன்மக்கள்வாழ்வு பெறலாமோ
பாமரர்கள்மாளவென்று ராமசரமேவியன்று
பாழ்படயிலங்கைசென்ற ரகுநாதா
பாவவினைதேடிவந்தென் நாவியைவருத்திடாமுன்
பாதமலர்சேரஅன்பு அருள்வாயே
சேமகரமாகவுந்தன் ராமதிருநாமமந்த்ர
த்யானமெனவேதுதிக்கு மிடியேன்முன்
சீதைமணவாளனென மாதவமுகுந்தஞான
சீர்கருடன்மீதிலேறி வருவாயே (1)

வேறு

தோகையர்வலைக்குள் வாகுடனேசிக்கி
துன்பமிகவாகி மெலியாதே
சூலைமதிமாலைவாலை சயரோகஞ்
சோகைபிணிநோய்க ளணுகாதே
வேகமுடனேமன ஆகமுறும்ஆவி
மேலிடுமோர்பாசம் வரியாமுன்
மேதினியிலுந்தன் பாதமலர்தந்தென்
வேதையறவந்தென் விழிகாண
வாகைபெறுபோரில் போகசரமேவி
வாளவுணர்மாயச் சிறைதீர
மாதுடனயோத்தி மாதையும்அருந்தி
மாமுடிபுனைந்த ரகுநாதா
ஓகையுறுதம்பி மார்களொடுபம்பி
யுன்னடிமைநம்பு மநுமானே
டோங்குசிறைவீசு பூங்கருடனேறி
ஓங்கலெனவென்முன் வருவாயே (2)

வேறு

அலைந்தலைந்தறிவீணரைநிதமும்
உகந்தருந்தமிழ்பாடியபதமும்
அரங்கந்தனிலுரையாடியவிதமும் ஒருகோடி
அறிந்தநூலினர்போலவேநிதமும்
பிரிந்திடாவகைபோயினர்மதமும்
அலைந்துதேய்ந்துளவென்னிருபதமும் குறைவாகி
உலைந்துநானவர்பின்சென்றேடியும்
இரங்கிடாரவர்தம்பொன்வாழ்வினி
லுகந்துமேன்மைமிகுந்திடவாழ்வவர் மிகுசெல்வம்

உயர்ந்தநன்மைகளிதைவிடவேறிலை
நிரந்தரமுமிதுநிச்சயமென்றுட
லுருண்டிடாதெனவெருண்டபேர்களை உலகோரை
குலைந்திடும்படிபேசியுமேசியும்
இகழ்ந்தவேசைசமேலாசையுநேசமும்
குனிந்தகங்கணமாதராடாசமும் பெற்றோர்கள்
குறைந்தவேழைகள்கும்பிகுளிர்ந்திட
சிரங்கைநீரும்விடாமலருந்திய
குரங்குதீயர்களோடுறவாயெனைக் கூட்டாதே
மலர்ந்தமல்லிகைமுல்லையரும்புட
னிறைந்ததாமரைமாமலர்விட்சியும்
மகிழ்ந்தமாமணியுந்துளவுந்திகழ் ரகுநாதா
வளம்பொருந்தியயிந்திரையாளுட
னுளந்திருந்தியநல்லடியார்தொழ
வயங்குலாவியகருடன்மேலென்முகம் வருவாயே (3)

வேறு

சாதருணிபென்றனை வணங்கிலேன்வீணிலே
மாதர்மயல்கொண்டுபிணி யுண்டிலேனுணிலேன்
சாகரமுனேர்கொடிய சமுசாரவாழ்க்கையாற் றளர்வேனே
தூதர்களுமோலைகொடு ஓடிவந்தாரிதோ
மாதரினமக்களுடன் மேல்விழுந்தாரையோ
சூசனைகடெரியாமல் மாரிபோலென்கணீர் சொரிபோதில்
ஆதரவதாயண்டையார்வந்து கூடியேமாதர்மனை
மக்களைநினைந்துநீ ரோடியேவாடுமுடி
பாடெனவுடந்தையாய் நாடியே அரைச்சாவி
பேதைமனையாள்தொடப் பிள்ளைநானென்றிடப்
போதமத்யஸ்தரிப்பிரேதந் தழைத்திடப்பேயெண
வவஸ்தைப்பெறுது கருடன்மீது வருவாயே (4)
சடம்விட்டாவி யிறக்குமுன்னே
குறுகுறெனச்சேஷ்ம மினுக்குமுன்னே
நாடிதவறிப்போய்நிலை தாண்டுமுன்னேமுறை யுறவோர்கள்
இடம்விட்டொருவிச் சேருமுன்னே
யென்சடனைக்கண்டு சலிக்குமுனேமுடி
யிடையிற்றயிலமுழுக்குமுன்னேபறை யொலியோடே
படியப்பாடையெடுக்குமுனேவழி
முடியப்பொரிகளிறைக்குமுனேகடி
படியுமாசனம்போகுமுனே குடமீதேற்றி
குடமிட்டருநீரூற்றுமுன்னேநடு
தலையிற்கொள்ளிநாட்டுமுன்னே
கலகுலெனத்தீமூண்டெரியுமுனேநீ யருள்வாயே

அஷ்டாக்ஷரத்திருப்புகழ் முற்றிற்று

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# அரியக்குடி அலர்மேலுமங்கைத் தாயார்பேரில் பதிகம்

நேர்துறை.

சூதேவிளைக்கின்றமின்னார்கள்செய்யுந்தொழிலதனால்
வாதேபுரிந்துமயங்குவனோவிந்தமாநிலத்திற்
றீதேயகற்றுந்திருவேங்கடேசனைச்சேர்ந்தருளும்
மாதேயரியக்குடியலர்மேன்மங்கைமாமகளே. 1

ஊனேமிகுந்திடுமங்கையராற்சிந்தையுள்ளமட்டும்
நானேதவிக்கவுஞாயமுண்டோநற்றுளவலங்கற்
றேனேகவழும்திருவேங்கடேசனைச்சேர்ந்தருளும்
மானேயரியக்குடியலர்மேன்மங்கைமாமகளே. 2

பயமேவிளைக்குநம்மெனச்சொல்லுங்கட்பாவையரால்
துயரேமிகுந்துலையாமலுனைத்துதிசொல்லுவனோ
ஜெயமேகிளைக்குந்திருவேங்கடேசனைச்சேர்ந்தருளும்
மயிலேயரியக்குடியலர்மேன்மங்கைமாமகளே. 3

உடலேபலபலவாயெடுத்தோய்ந்துன்னுபயபதப்
படமேகதியென்றுயான்பணிந்தேனிப்பரப்பதனிற்
றிடமேகொடுக்குந்திருவேங்கடேசனைச்சேர்ந்தருளும்
வடியேயரியக்குடியலர்மேன்மங்கைமாமகளே. 4

கருவூர்புகுந்துகுடியாயிருந்திந்தக்காசினியில்
அருமாதவஞ்செய்துநான்வளர்ந்தேனுன்னருணல்குவாய்
திருவேசிறந்ததிருவேங்கடேசனைச்சேர்ந்தருளும்
மருவேயரியக்குடியலர்மேன்மங்கைமாமகளே. 5

நிலையானவாழ்வென்றுநீயிருந்தானையென்னெஞ்சில்வைத்து
அலையாதிருக்கவரமருள்வாயிந்தவம்புவியில்
சிலையைவளைத்ததிருவேங்கடேசனைச்சேர்ந்தருள்வி
மலையேயரியக்குடியலர்மேன்மங்கைமாமகளே. 6

விதியாலமைந்திடுஜன்மாந்திரத்துவினைப்பயனால்
கதியேபெருமலுலைந்தலைந்தேனுன்கருணைசெய்வாய்
நிதியேகொடுக்குந்திருவேங்கடேசனைநேயமுறு
மதியேயரியக்குடியலர்மேன்மங்கைமாமகளே. 7

அகமேமகிழ்ந்துன்னடிபணியாமலரிவையர்தஞ்
சுகமேகதியென்றுறுங்கொடியேனிந்தத்தொல்லுலகிற்
புகழேவிளங்குமிதுலேசனாகியபூபதிக்கு
மகளேயரியக்குடியலர்மேன்மங்கைமாமகளே. 8

தாழ்வேகொடுத்தெனைச்சஞ்சலத்தாழ்த்துஞ்சமுத்திரத்தில்
வீழ்வேன்தடுத்தெனையாட்கொண்டிரட்சியுமெய்ப்பொருளே

ஆழ்வார்பணியுந்திருவேங்கடேசனகனிறைந்த
வாழ்வேயரியக்குடியலர்மேன் மங்கைமாமகளே. 9

தாயேயுனையன்றியெந்தனுக்கோர் துணைசற்றுமில்லை
நீயேமனுவொன்று தந்தருள்வாயஷ்டலட்சுமியே
சேயேனையாளவும்வேங்கடமாலுடன்சேதிசொல்லி
மாயாமற்காத்தருள்வாயலர்மேன்மங்கைமாமகளே. 10

அரியக்குடி அலர்மேலுமங்கைத் தாயார்பேரில் பதிகம் முற்றிற்று.

---

# நேரிசை வெண்பா

பொன்னரங்கர்சந்நிதியிற்போந்துவலம்வந்துகண்டோர்
தன்னைச்சன்மப்பிணிகள்சாராது—இன்னிலத்தை
ஆள்வார்சுகம்பெறுவாராண்டபின்னும்பொன்னுலகில்
வாள்வாரவர்க்குவரம். 1

இவ்விடத்திற்றுனேயிருக்கவென்றுலேமனெட்டான்
அவ்விடத்தில்வாழ்கவயனெட்டான்—எவ்விடத்திற்
போடுவேன்பொய்யுடலைப்போக்கடித்துப்பொன்னரங்கா
நாடுவதென் றுன்னையேநான். 2

நானென்றவாணவத்தைநாசமுறச்செய்தடிமை
தானென்றெனையுன்றன்றுண்மலர்க்கீழ்—ஞானமுறக்
காத்தவனேமாற்றரியகர்மவினையத்தனையுந்
தீத்தவனேநற்கெதியைச்செய். 3

எண்ணாதவெண்ணமெல்லாமெண்ணியெண்ணியேழையிரு
கண்ணுவிசோரக்கரைவானேன்—விண்ணுடர்
வந்துபிதம்வந்திருக்குமாதவனேமாய்கையினேன்
சிந்தையறிந்தென்னையாட்செய். 4

தீவினைப்போய்நல்வினையாஞ்சென்மப்பயமகலு
மாவினைமுன்காத்தவரதாயே—ஆவலுடன்
சேஷ்டாங்கமாகுந்திருமந்திரமுரைத்துச்
சாஷ்டாங்கமாய்ப்பணியத்தான். 5

தீராவினைதீர்க்குஞ்செல்வப்பொருள்சேர்க்கும்
ஓராயிரத்திலுறைந்திருக்கும்—நேராக
உபயகாவேரியிடையுற்றரவினித்திரைகொ
ளபயவரத்தனடி. 6

ஈனமுற்றதோலுதிரமென்புநரம்புஞ்சீயு
மாளவுடற்சதமென்றுசையாய்—மாநிலத்தில்
நம்புவதுஞாயமோநாராயணாகமலச்
செம்பதத்தைநீகிருபைசெய். 7

நேரிசைவெண்பா முற்றிற்று.

ஸ்ரீ

# ஸ்ரீராமர்பேரில் பதம்

இராகம்-நீலாம்புரி

பல்லவி

ஊழ்வினைகளென்னை வந்தணுகாமலே
உதவிசெய்வாய்ராமா — ஊழ்

அநுபல்லவி

பாழிலேமனுமெனைத்தொடராமலே பதமருள்சார்வபூமா-நல்ல
வரமருள்பரந்தாமா தசரதனருளிய — ராமா — ஊழ்

சரணங்கள்

தாவுமூதண்டசராசரமெங்குஞ்
சரியாய்நின்றபெரியோனே — உந்த
நாபிக்கமலத்திலோகம்பதினன்கு
நல்குமெழிற்கரியோனே — பொல்லாத்
தீவினைகளென்னசெய்தேனோநான்
பூர்வசென்மத்திலேயறியேனே — இந்தப்
பூவுலகில்வந்துபாதம்வணங்கப்
பொருந்திலேன்நான்சிறியேனே — பச்சை
ஆலிலைமேற்றுயில்வோனே
ஒருக்காலுமறக்கறி — யேனே — ஊழ்

மாதவனே அரிகேசவாவைகுண்ட
வாசம்விட்டுப்புவிமேலே — போக
ஆதரவாகத்தசரதபுத்திர
னாகவந்தவன்பினலே — இந்த
பூதலமெய்க்கவேராட்சதரைவென்ற
பூந்துளவமணிமாலே — நிதம்
சீதாபிராமனென்றனுதினமறவாமல்
தியானஞ்செய்வேனுவினலே — கிருபை
தென்புடன்செய்யொருக்காலே
திவ்வியசம்பிரமமாம்நெடு — மாலே — ஊழ்

சித்தசனேரங்கராமனேகிருஷ்ணனே
தேவாமுகுந்தனேராமா — எந்தன்
அத்தனேகோவிந்தஅச்சுதானந்தனே
ஆரணங்கூறுயிரநாமா — சுத்த
பொற்றலம்போற்றவேகருடன்மேல்வந்தென்னை
புரந்தருளும்புயவீமா — உந்தன்
பத்தன்பஞ்சாட்சரப்பேருள்ளதாசன்
பணிவிடைகொண்டருள்சோமா — உன்மேற்
பாரம்ரட்சிப்பதுவீண்போமா
கோதண்டதீரனேசீதாபி — ராமா — ஊழ்

பதம்-இ-ம்-சங்கராபரணம்.

பல்லவி

வேண்டாமையாயிந்தஜனனம்-ஒருக்காலும்
வேண்டாமையாயிந்தஜனனம் வேண்

அநுபல்லவி

வேண்டாமையாமணித் தூண்டாவிளக்கான
வித்தகனும்பரி சுத்தமயேஸ்வரன்
மெச்சிமகிழ்ந்திடு மச்சுதனேமிறப்
பச்சைவண்ணப்பரந் தாமாவென்மேற்பிழை வேண்

சரணங்கள்

1 பஞ்சபூதமைந்துஞ் சேர்ந்துடலாயிந்தப்
பாரிலலேந்திரைதேடி கொஞ்சிக்
கொஞ்சுமொழிமாதரைக் கூடியாடி
குலாவிநமன்வர வாடி
நெஞ்சிலறிவில்லாமல் நினைவுதடுமாறியே
கெஞ்சிக்கெஞ்சிமிகக் கிலேசப்படுமனது வேண்

2 ஒன்பதுவாயுள்ளகோட்டை பூட்டில்லாம
லோரிநரியாடும்வேட்டை அதிற்
செம்பொன்மணிவைத்தநாட்டை யுருக்கொண்டு
திருவடியளிப்பாய்நல் வீட்டை
சம்பிரமாகவுந்தன் தயவில்லாவிடில்வாய்ந்த
துன்பசாகரத்தைத் துணையற்றுநானீந்த வேண்

3 நீர்மேற்குமிழியானகாயம் இதைநம்பி
நிசமென்றிருக்கிலபாயம் இந்தப்
பார்மேலுன்னுடையநேயம் தமியன்மேற்
பட்சம்வைத்தருளுஞ் சகாயம்
கார்மேனியான கரிவரதேந்திரா
சீர்மேவுந்தேவர்தொழும் ராமச்சந்திரா வேண்

பதம்-இ-ம்-ஆகிரி

பல்லவி

இனியென்னாலாகாதையா-உனைத்தேட
இனியென்னாலாகாதையா இனி

அநுபல்லவி

இனியென்னாலாகாது முனிவர்பணியுநேசா
இஷ்டகாமியந்தரும் அஷ்டலட்சுமிவாசா இனி

சரணங்கள்

1 பாற்கடலில்குடியோ பரமபதம்
பச்சையாலிலே யடியோ

எற்கும்பணுமுடியோ தேவரைக்கண்
டிணங்குவதெப் படியோ
மார்க்கமதாகவே வந்தெனை ரட்சித்துக்
கார்க்கக்கடனுனக்குக் கார்மேகவண்ணனே இனி
2 தோத்தரிப்போர்சூள அயோத்தியில்
துணிந்தாய்நீயர சாள
மாற்றியென்வினை மாளகிருபைசெய்து
டகிட்சியாயெனை யாள
காற்றடிக்கத்தாழை பூத்திடுஞாயமே
நேத்திரந்திறந்தென்னைக் காத்தருள்மாயனே இனி
3 வேலையடைத்தபரனே இமையோர்கள்
வேதனை தீர்த்த சரனே
வாலைசகோதரனே திருத்துளப
மாலையணிந்த வரனே
ஆலையில்லாவூருக் கிலுப்பைப்பூச்சர்க்கரை
ஆமாநீசெய்கிற புதுமையுனக்கக்கரை இனி

பதம்-இ-ம்-முகாரி

பல்லவி

தரிசிக்கவேணும் ஸ்ரீராமனை
தரிசிக்கவேணும் ஸ்ரீரங்கனை
தரிசிக்கவேணும் ஸ்ரீநிவாசனை
தரிசிக்கவேணும் ரகுநந்தனைத்
தரிசிக்கவேணும்

அநுபல்லவி

தரிசிக்கவேணும்நல்ல பரிசுத்தமாகிய
ஸ்ரீரங்கநாதனைப் பாரெங்கும்வாழ்பவர் தரி

சரணங்கள்

1 சாஸ்திரமாறுடன் பதினெண்புராணமுந்
தத்வந்தொண்ணூற்றாறுந் தனிநான்குவேதமும்
மாற்றியவனுடைய கீர்த்தியையுலகத்தில்
வரமிகுந்திடும்படி இரணியன்செய்திட
நாற்றிசையினுனைத் தோத்திரமாய்ப்போற்ற
நரசிம்மரூபமாய் உரங்கொண்டவனுயிரை
நேத்தியதாகவே கூத்துவன்போற்கொன்ற
நீலநிறமுள்ள மாலின்றிருவடி தரி
2 அண்டருமுனிவரு மெண்டிசையோர்களும்
அரக்கருபாதியிற் பொறுக்கமுடியாமல்
தெண்டனிட்டுன்னைப் போற்றிவணங்கிடத்
தேவர்முனிவர்துன்பம் யாவையுந்தீர்க்கவே

மண்டலத்திலயோத்தி ராசன்தசரதன்
மைந்தனென்றுதித்து சுந்தரவில்லினுற்
கண்டகனுகிய ராட்சதனைவென்ற
கரியமாலாகிய அரியின்திருவடி தரி

3 கஞ்சமலருதித்தமாமன் கஞ்சனுக்காகக்
கபடநாடகமுடன் கலியுகத்தினின்முனம்
வஞ்சகக்கபடமாய் மருவியகிருஷ்ணனுய்
வந்துவல்லவனென்று பந்துபல்லோர்துதிக்க
பஞ்சபாண்டவர்கள் பாரதப்போர்செய்யப்
பார்த்தசாரதியாகிக் காத்தருளியதேவா
செஞ்சொன்மொழிந்திடும் பஞ்சாட்சரதாசன்
சேயனைரட்சிக்கும் மாயகோபாலனை தரி

பதம்-இ-ம்-ஆரபி

பல்லவி

எத்தனை சொன்னுலுங் கேளாமலிருப்ப
தென்ன பராமுகமோ எத்தனை

அநுபல்லவி

நித்திரையோதிருப் பாற்கடல்வாழ்கின்ற
நேசனேவைகுந்த வாசனேநான்தினம் எத்தனை

சரணங்கள்

1 மூவருமோதிய ராமமந்திரமென்று
முறையிடுநால்வேதங்குண்ணவோ மெத்தப்
பாவங்கள்செய்திட்டவேடன் ஸ்ரீராமாவென்று
பரமபதத்துற்ற தெண்ணவோ
ஆவலுடன்செய்த வால்மீகிகாவியம்
அத்தனையும்அருள் பண்ணவோ
தேவனேசீதாபி ராமாவுன்னுமத்தை
சிந்தையில்நானித முண்ணவோ எத்த

2 விண்ணுடர்மகிழ்பெற ராட்சசப்பூண்டெல்லாம்
வேரோடறுத்த சரக்கையா இந்த
மண்ணுண்டராஜாக்கள் ராமாயணமென்று
வாசித்துப்பெற்றபேறு பொய்யா
கண்ணாரக்கண்டுன்னை ரங்கஸ்தலமென்று
காசினியோர்தொழு மெய்யா
என்னுளுமுந்த னடிமையென்றெண்ணி
யிரங்காதிருப்ப தென்னையா எத்த

3 ஆரணனிந்திரன் யாவரும்போற்றிய
அஷ்டாட்சரமுள்ளமந்த்ரா வெற்றி

வாரணந்தன்னை மடுவினில்ரட்சித்த
வல்லனேமாய சுந்திரா
காரணமாகவே ஆலிலைமேற்றுயில்
கபடநாடகமுளதந்திரா அரி
நாரணனேயுந்தன் திருவடியேகதி
நான்பணிந்தேன் ஸ்ரீராமச்சந்திரா எத்த

பதம்-இ-ம்-இரேகுபதி

பல்லவி

ஐயனே ஸ்ரீராமா இந்த அவதிப்படலாமா ஐய

அநுபல்லவி

தெய்வமென்றுனை மெய்யாகநம்பிநான்
தியங்கித்திரியலாமா ஐய

சரணங்கள்

எண்ணாத வெண்ணமெல்லா
மெண்ணிப்பொய்யாய்ப் போனேனையே-கடைக்
கண்ணாற்பாராய்ப் பெண்ணைக்
கல்லைக்கண்டாய் வழியிற்பொய்யோ ஐய
வஞ்சகருதுடன்மோசம் நெஞ்சினில்வைத்தோதும்-அந்தப்
பஞ்சமாபாவியர்நேச மஞ்சினேன்நான்போதும் ஐய
சேதியெல்லாநீயறிவாய் நீதிவரம்புரிவாய்-ஞானச்
சோதியுநீதானேயெனக் காதியுநீதானே ஐய
தேசத்தோர்பயமொழிக்க வாசத்தார்தசரதற்கு
இராஜராமரென்னவந்த கோசலைகுணபுத்திரனே ஐய
தப்பிதஞ்செய்தாலுமுனை யெப்படிவைதாலுமெனை
இப்பிறவிதீர்த்துன்தாசர் பொற்பதஞ்சேர்த்தாள்வாய் ஐய

பதம்-இ-ம்-புன்னாகவராளி

பல்லவி

அடிமைநானுன்னைவிடேன்-திருவடி
யல்லால்வேறொன்றுந்தொடேன் அடி

அநுபல்லவி

மடுவிற்கஜேந்திரனை மாளாமலுயிர்காத்த
நெடுமாலேயுந்தன்பாத நிழலிலன்புசேர்த்து அடி

சரணங்கள்

1 ஆசைவலையைவீசியே யென்மார்பில்
அழகுசந்தனம் பூசியே
பாஷைபலவும்பேசியே வாழ்க்கையைப்
பழித்துமிகவு மேசியே

நேசித்துன்பாதத்தை நித்தியம்பத்தியாய்ப்
பூசித்தேனுணவப் பொறிவேரறுத்திட அடி

2 அட்டாக்கரத்தோனே யென்னை
ஆளுந்தயா பரனே
பட்டாபிராமராமனே ஏழையர்
பங்கிற்றீன தயாளனே
திட்டாந்திரமாகத் தீவினையெந்தனை
கிட்டாதபடியுந்தன் கிருபையைநான்பெற அடி

3 தேவர்கடுயர்தீர வயோத்தியிற்
செங்கோல்வளங் கூற
மூவுலகுஞ்சோர தசரதன்
முத்திவழி சோர
ராவணுதியராம் ராக்கதரையெல்லாம்
ஆவியழித்தெந்த னன்னையைமீட்டவா அடி

பதம்-இ-ம்-ஆனந்தபைரவி

பல்லவி

தாருந்தாருமையா-திருவடி-தாருந்தாருமையா

அநுபல்லவி

பூருவம்ராக்கதர் புன்கணகற்றவந்த
புஜபலவீரனே தசரதராமனே தாரு

சரணங்கள்

1 மாயவஞ்சியர்வலையிற்சிக் காமலே
வம்பரிடஞ்சென்றுவாய்புதைக் காமலே
காயம்வருந்திமிகப்பரதவிக் காமலே
கனவிலுன்மந்திரந்தனை மறக் காமலே தாரு

2 பத்தியாம்பதத்தைநான்கை விடாமலே
பசியென்போர்முகத்தைப்பார்த்து முண்ணமலே
இத்தரையிலென்னைத்துயர்தொட ராமலே
இந்தசனனமினிமேலும் எடாமலே தாரு

3 வல்லிருளாகியவென்வினை தீர்க்கவும்
மகிழ்வாய்கருடனேறிவரவெதிர் பார்க்கவும்
சொல்லுந்தமிழ்த்துதியின்பிழைகளைப் போக்கவும்
சுகமாகவென்றனையுன்றிருவடி சேர்க்கவும் தாரு

பதம்-இ-ம்-பைரவி

பல்லவி

இதுவாகிலுஞ்சொல்லுவாயே-சும்மா
இருக்காதேபெருக்கானநீயே இது

அநுபல்லவி

மதுசூதனாகிய மாயன்கோபாலனை
நிதமுந் துதிசெய்து நீகதிபெறவே இது

சரணங்கள்

1 தெருவிலுள்ளகோயிலைத்தேடிராம்ரா மென்றும்
திருவிளக்கிலெய்யைவிட்டுராம்ரா மென்றும்
மருவெடுத்துன்பதஞ்சூடிராம்ரா மென்றும்
வசனம்பசனகவிபாடிராம்ரா மென்றும் இது

2 ஞானப்பொருளிவர்சேர்க்கிறாரா மென்றும்
நம்பினபேர்களைக்கார்க்கிறாரா மென்றும்
ஊனங்களானதைத்தீர்க்கிறாரா மென்றும்
உத்தமகாரியம்பார்க்கிறாரா மென்றும் இது

3 பிள்ளைக்குப்பாலைப்புகட்டுறாரா மென்றும்
பூரணச்சந்திரன்காட்டுறாரா மென்றும்
வெள்ளியெழுத்தாணிதீட்டுறாரா மென்றும்
வெளிக்கதவங்களைப்பூட்டுறாரா மென்றும் இது

பதம்-இ-ம்-சங்கராபரணம்

பல்லவி

மறவாதேநீமனமே-ஸ்ரீராமமந்திரம்-மறவாதே-நீமனமே

அநுபல்லவி

மறவாதேநீமனமே மாயன்றிருப்பதத்தை
யிரவும்பகலானாலு மிறைஞ்சத்தருஞ்சுகத்தை மற

சரணங்கள்

1 யானையிரதமேறி யம்புவியாண்டாலும்
சேனைகாவலருனைச் சேவித்துநின்றாலும்
தானதருமங்களைத் தவறாமல்செய்தாலும்
ஞானபோதங்களை நலம்பெறவுரைத்தாலும் மற

2 உன்னைக்கெடுக்கநிந்தை யுரைத்துமுடியிட்டாலும்
அன்னைதந்தையர்சுகம் யாவுமடிந்திட்டாலும்
கன்னமிட்டுக்கொள்ளை கள்ளரடித்தாலும்
வின்னமாய்த்தேகத்தில் வேதனைவிளைந்திட்டாலும் மற

3 வாதாடித்தீதாக வழக்குக்கிழுத்தாலும்
வேதாகமங்களை விவரமாய்க்கற்றாலும்
சூதாமதுபானிகள் தோணாமல்வைத்தாலும்
தீதாகவேசனி சென்மத்தில்வந்தாலும் மற

### பதம்-இ-ப-ஆனந்தபைரவி

பல்லவி

ஏன்கவலைப்படுகிறாய்நெஞ்சே ஸ்ரீராமனிருக்க ஏன்

அநுபல்லவி

மான்வடிவாகிவந்த மாரீசனைக்கொன்ற
மாதவனுமத்தை யோதிப்பதம்பெறாமல் ஏன்

சரணங்கள்

1 சற்றுந்தயையில்லாத சண்டாளருடன்கூடி
சன்மார்க்கந்தனைவிட்டு துன்மார்க்கத்தையேநாடி
ஏற்றுங்கொலைகளவை யென்னேரமுங்கொண்டாடி
யிரவும்பகலுமோர்சாண் கும்பிக்கிரைதேடி ஏன்

2 நல்லோரைக்கண்டுசாது சங்கஞ்செய்யாமற்றீதே
நமனுக்குநாள் தள்ளி நாய்போற்றிரிந்தாதே
செல்லாதகாரியத்தைச் சிந்தையிற்குறியாதே
செனனமரணவேதை தீமையையறியாதே ஏன்

3 இகமதில்மானிடர்மேல் உனக்கென்ன அபிமானம்
ஏதுக்கோடிச்செய்கிறாய்நீ சேதுவினில்ஸ்நானம்
மகிமைபெறக்கருதிச் செய்வானேன் தர்மதானம்
வானவர்துதிக்கும்ராம மந்த்ரந்தருமேஞானம் ஏன்

## ஸ்ரீநிவாசப்பெருமாள்பேரில் பதம்

இராகம்-காம்போதி

1837ப

பல்லவி

ஸ்ரீநிவாசனற்றிருவடிதரிசிக்க சென்மப்பிணிகள்தீரும்

அநுபல்லவி.

மாநிலந்தன்னிலே வாழும்அலர்மேலு
மங்கைபங்காளனெழி றங்குபங்கயப்பாத ஸ்ரீநி

சரணங்கள்

1 மச்சமுதலாங்கூர்ம வாமனவராகனும்
அச்சுதாநந்தநந்த வாயாசெவ்வாயனும்
பட்சமாய்ப்பாற்கடற் பள்ளிகொண்டருளிய
நிச்சயமுள்ளநம் நீதிவேங்கடேசனும் ஸ்ரீநி

2 அரிகரிகிருஷ்ணனை மனந்தகல்யாணனும்
கிரிதனையெடுத்தோனுங் கேசவமுகுந்தனும்
உறியேறிதயிர்வெண்ணெய் யுகந்தமுதுண்டோனும்
பரிவுள்ளயடியார்கள் பங்கிலிருப்போனும் ஸ்ரீநி

3 உருவமருவமாகி உளதுமிலாதாகி
முருகவிழ்துளசியை முடியிலணிவதாகி
இருவினை துடைத்தன்பர்க் கினிமையருளியாண்டு
சிறுவனுக்கருள்செய்யுஞ் சிதாபிராமனும் ஸ்ரீநி

## ஸ்ரீரங்கநாயகர்பேரில் காட்சி

பதம்-இ-ம்-தோடி

பல்லவி

வந்துகண்டேனே ஸ்ரீரங்கனைச் சிந்தைகொண்டேனே

அநுபல்லவி

வந்துகண்டேன்எந்தன் பந்தபாசமற
மாதவனாகிய ஆதிமூலந்தன்னை வந்து

சரணங்கள்

1 அந்தணரோதியவேத புராணமும்
ஆழ்வாரருளியபிரபந்தத் தியானமும்
சந்திரபுஷ்கரணியில்ஸ்நானஞ்செய் நேமமும்
சைவவைஷ்ணவஞ்செய்பனுஷ் டானமும் வந்து

2 சிதளமானகருங்கற்றூண் சேர்வையும்
சிந்திக்குந்தாசர்கள்வந்தனப் பார்வையும்
ஜோதிப்பிரகாசபீதாம்பரப் போர்வையும்
துன்பமகற்றுந்திவ்யதிருவடிச் சேர்வையும் வந்து

3 உத்திரதேசக்கோஜாயிகள் கூட்டமும்
உத்தமரோர்காலினற்றவ நாட்டமும்
வெற்றிதரும்அநுமார்பரி யாட்டமும்
மேவும்அடியவர் தீவினை யோட்டமும் வந்து

ஸ்ரீராமர்பேரில் பதம் முற்றிற்று.

கார்வண்ணமாலை

முற்றிற்று.

183215
சென்னை 600 023

விளம்ப ரம்.

மயர்வற மதிநல ருளப்பெற்ற

# ஆழ்வாரா சாரியர்கள்

அருளி ச்செய்த

# நித்யா நு ஸந்தா நம்

ஸ்ரீயஃபதியாய், ஸ்ரீவைகுண்ட நிகேதனனாய், சர்வ வியாபகனாய்,
ாரகனாய், சர்வ ரக்ஷக னாய், சர்வ போக்தாவாய், சர்வக்ஞனாய்,
த சமஸ்த காமனாய், அகில புவன ஜன்ம ஸ்திதி லய காரணனாய்
தம் ஸ்ரீமந்-நாராயணப் பெருமான் பெறற்கருள் தவப்பேறுடைய
கோடிகட் கநுக்ரகம் புரிவான்விரும்பி இப்பிரபஞ்சத்தின்கண்
ங்கு அர்ச்சாவதா ங்கொண்டு எழுந்தருளியிருக்கும் திவ்விய
டோறுஞ்சென் , எம்பெருமானது திருக்கல்யாணகுணத்தை
ட்டு பன்னிரு ஆழ்வாராசாரியர்களாலும் திருவாய்மலர்ந்தரு
ட திராவிடவே மென்னும் திவ்ய ப்ரபந்தங்களுள் இன்றியமை
றப்பினவாய் ப ாகவத சிரேஷ்டர்களால் பிரதிதினமும் முக்கிய
னத்துக்குரிய திவ்ய திருப்பல்லாண்டு திருப்பாவை, தோழில்
ப்மொழி, இரா ாநுசநூற்றந்தாதி முதலிய திருப்பாசுரங்களை த்
'நித்யாநுஸந் தானம்' என்னுந் திருப்பெயரால் நல்ல கிளேஸ்
திலும், விலை சுலபமாக வேண்டியவர்கட்கு ரப் கடிதத்திலும்,
பில்லாமல் தி த்தி அச்சிட்டுள்ளோம். இதுகாறும் எவரும் இப்
ிப்பித்தது இ டையாது.

| தென்கலை சுத் தப்பிரதி | | வடகலை சுத்தப்பிரதி | |
|---|---|---|---|
| ாஸ்கடிதம் | விலை ரூபா 1 | கிளேஸ்கடிதம் | விலை ரூபா 1 |
| கடிதம் | விலை அணா 12 | ரப்புகடிதம் | விலை அணா 8 |

பிரா ன்னர்கள் அநுஷ்டிக்கவேண்டிய

## நித்தியாநுஷ்டானவிதி

சுத்தப்பி ரதி ரப்புதிக்கடிதம் விலை அணா 4.

## ாள் திரு ப்பாவை ௩௦-பாசுரமும்சரித்திரமும்

சுத்தப்பி ரதி ரப்புதிக்கடிதம் விலை அணா 2.

ஆ. இரங்கசாமிமுதலியார் சன்ஸ்,
24, தாண்டவராயப்பிள்ளை வீதி சென்னை